# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, ஆவணி 18ஃ (3-9-72) ஞாயிறு 1391 றஜப்ஆகிர் 24 புத்தகம் 25 இதழ் 40


## தமிழர் கூட்டணியின் இரகசிய முடிவு!

ஆறு அம்சக் கோரிக்கையை அரசு முன் சமர்ப்பித்து தமிழர் கூட்டணி கொடுத்த மூன்று மாத காலக்கெடு செப்டம்பர் 30ம் திகதியுடன் முடிவடைகிறதல்லவா? இந்தக் காலக்கெடு முடிவடையும் செப்டம்பர் 30ம் திகதியன்று அரசாங்கத்துக்கும் உலகுக்கும் அதிர்ச்சியையும் தமிழ் மக்களுக்கு எழுச்சியையும் ஊட்டவல்ல ஒரு செயலைச் செய்வதென்று தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த முடிவு இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதென்றும், செப்டம்பர் 30ம் திகதியே வெளியிடப்படுமென்றும் அக்டோபர் முதல் திகதி இதை விளக்கி, தமிழ் ஈழத்தின் ஐந்து தலைநகரங்களிலும் பொதுக் கூட்டங்களை நடத்துவதெனவும் தமிழர் கூட்டணி தீர்மானித்துள்ளது.

# தமிழர் கூட்டணித் தலைவர்களை சிறைப்படுத்தத் திட்டம்!

## போராட்டத்தை முளையிலே கிள்ள இதுவே சரியான வழியாம்!

தமிழர் கூட்டணியின் சில முக்கிய தலைவர்களை இத்திங்கள் நடுப்பகுதியில் சிறைப்படுத்த அரசு திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது. செப்டம்பர் 30ம் திகதிக்கு பின்னர் தமிழர் கூட்டணி ஆரம்பிக்கவிருக்கும் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சாத்விகப் போராட்டத்தை இப்படிச் செய்வதன் மூலம் முளையிலேயே கிள்ளியெறிந்துவிட முடியுமென ஆட்சியாளர்கள் மனப்பால் குடிக்கின்றனராம்!

இத்திட்டத்தின்படி தமிழர் கூட்டணியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் அரசு இப்போதைக்கு கை வைக்காதென்றும், அப்படி பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்தால் அது பாரதூரமான விஷயமாக, உலக நாடுகளில் அடிபடும் பிரச்சினையாக உருவாகிவிடுமென்று அரசு கருதுவதாகவும் தெரியவருகிறது.

இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்களாக இல்லாத அதேசமயம் தமிழர் கூட்டணியின் முன்னணித் தலைவர்களாக விளங்கும் பல முக்கியஸ்தர்களை இத்திங்கள் நடுப்பகுதியில் சிறைப்படுத்தி தடுப்புக்காவலில் வைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாம்.

குறிப்பிட்ட சில தலைவர்களை கைது செய்து சிறையிலடைத்துவிட்டு, அதன் விளைவு என்ன வென்பதை அரசு உன்னிப்பாகக் கவனிக்குமென்றும், அதன் பின்னரே மேற்கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுமென்றும் அறியவருகிறது.

## சிறிமா—சாத்திரி ஒப்பந்தம்:

## மீறிவிட்டது இலங்கை அரசு!

### நிலம் வழங்குவதில் பாரபட்சம்! இந்திய அரசின் பதில் என்ன?

இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படும் தோட்டத்தொழிலாளர்கள் உட்பட இந்திய வம்சாவழியினர் எவருக்கும் மலைநாட்டுப்பகுதியில் நிலம் கிடைப்பதற்கு தடையாக நிலச் சீர்திருத்த மசோதாவைகொண்டுவந்து நிறைவேற்றியதன் மூலம் இலங்கை அரசு சிறீமா—சாத்திரி ஒப்பந்தத்தை மீறி அதை சிதைத்து விட்டதாக அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

சிறீமா—சாத்திரி ஒப்பந்தத்தின் கீழ் மூன்று லட்சம் நாடற்றோருக்கு பூரண இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க இலங்கை அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பூரண பிரஜாவுரிமை வழங்கப்படும் 3 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏனைய இலங்கைப் பிரஜைகளைப் போலவே சகல உரிமைகளும் உண்டு என்று இலங்கை அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.

சி. சா. ஒப்பந்தப் பிரகாரம் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படுபவர்களுக்கு எதுவித பாரபட்சமும் காட்டப்பட மாட்டாது என்று இலங்கை அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஆனால் அண்மையில் தேசிய அரசுப் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ள நிலச்சீர்திருத்த மசோதாவின் படி மலைநாட்டில் தோட்டத் தொழிலாளருக்கு ஒரு

(7-ம் பக்கம் பார்க்க)

## அக்டோபர் 2ல்:

# கடையடைப்பு, பிரார்த்தனை!

தமிழர் கூட்டணி தொடங்கவிருக்கும் சாத்விகப் போராட்டத்தின் முதல் படியாக காந்தியடிகள் பிறந்த நாளாகிய அக்டோபர் 2ம் நாள் தமிழ் ஈழமெங்கணும் பிரார்த்தனை நாளாக அனுட்டிக்கப்பட விருப்பதுடன், அன்றைய தினம் தமிழ் ஈழமெங்கும் கடைகள், மற்றும் வர்த்தக நிலையங்கள், தொழில் நிலையங்கள் பாடசாலைகள் அனைத்தும் மூடப்படும்.

அன்று மாலை தொகுதிகள் தோறும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தமிழ் மக்கள் பெருந்திரளாகக் கூடி தமிழர் கூட்டணி

## தமிழர் கூட்டணிக் கொடி

### தொகுதி தோறும் ஏற்றப்படும்!

யின் கொடியை ஏற்றி அதற்கு வணக்கம் தெரிவிப்பதுடன் தமிழர் தேசிய கீதத்தையும் அங்கு இசைப்பார்கள். இந் நிகழ்ச்சி, தமிழினம் சுயநிர்ணய உரிமைப் போரில் குதித்துள்ளது என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும்.

27-8-72ல் மட்டுநகரில் திரு. மு. மாணிக்கம் அவர்களது இல்லத்தில் கூடிய தமிழர் கூட்டணியின் மத்திய செயற் குழுவில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

### கொடி, சின்னம் நாட்டுப்பண்ணுக்கு அங்கீகாரம்

ஏற்கெனவே தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு எடுத்திருந்த முடிவுப்படி நாட்டுப்பண், கொடி, சின்னம் ஆகியவற்றுக்கு மத்திய செயற்குழு அங்கீகாரம் அளித்தது. இதன் படி சிவப்பு நிற பின்னணியில் பொன் நிறத்தில் உதய சூரியனைக் கொண்டதாக கொடி இருக்கும். உதயசூரியனே கூட்டணியின் சின்னமாகவும் 'வாழ்க ஈழத்தமிழகம்' எனும் கவிஞர் பரமஹம்சதாசனின் பாடலே நாட்டுப்பண்ணாகவும் விளங்கும்.

### அமிர் அறிக்கை:

தமிழர் கூட்டணியின் பொதுச் செயலாளர் நாவலர் திரு. அ. அமிர்தலிங்கம் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கை வருமாறு:

தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கைகளை

(7ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி ஆதரவாளருக்கே கூட்டுறவு இயக்குனர் பதவி?

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு இயக்குனர்கள் கூட்டுறவு ஆக்க ஆணையாளரால் புதிதாக நியமிக்கப்படவிருக்கிறார்கள். இப்பொழுதே எங்களுடைய ஆட்களை நியமியுங்கள்; எங்களுடைய ஆட்களை நியமியுங்கள் என்று அரசிலுள்ள மூன்று கட்சியினரும் போட்டி போடத்தொடங்கியுள்ளனர் என்று அறியப்படுகிறது.

அரசாங்கக் கட்சி பா. உ. க்கள் இல்லாத தொகுதிகளில் சிறீலங்கா சு. கட்சி அமைப்பாளர்களுக்கு நியமிக்கும் சலுகை வழங்கப்பட்டிருப்பதாகவும், அவர்களில் சிலர் வெளியிட்ட தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

சென்ற முறை செய்த நியமனத்தின்போது [illegible] பெற்ற ஊழல்கள் பற்றி பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகள் புட்டுக்காட்டினர். இப்பொழுதும் இன்னும் வேகமாக அதே பாணியில் ஆளுங்கட்சிக்கு சிலகையாட்களைப் பிடிப்பதற்கு வேலை நடக்கிறதுபோல் இருக்கிறது.

இவ்விஷயமாக ஆளுங் கட்சிகளின் இடையேயுண்டான போட்டிகளால், ஓர் அமைச்சர் பெரும் திண் [illegible]

# தமிழுக்கு இடம் எங்கே?

— 1971ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரம் பற்றிய அறிக்கை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. தமிழில் வெளியிடப்படவில்லை.

— 'சலு சலா' பற்றிய அறிக்கை தமிழில் வெளியிடப்படவில்லை.

— தமிழ் பிரதேசத்திலுள்ள சிங்களவர்கள் தமது பிள்ளைகளின் பிறப்புச்சாட்சிப் பத்திரங்களை சிங்களத்தில் பதிவு செய்வதற்கு வசதிசெய்யப்பட்டிருக்கும் அதே வேளையில் தமிழர்கள் [illegible]

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




எஸ். ஜே. வி. ராஜகுமார்,
மாதகல்.

கே: 53ம் ஆண்டில் இருந்தே மாநில சுயாட்சி கேட்டதாக பெருமையடித்துக் கொள்ளும் திரிபுவாதி வி. பொன்னம்பலம் தமிழர் கூட்டணியில் சேருவதற்கு பின்வாங்குவதேன்?

ப: தமிழர் கூட்டணியில் சேருவதற்கு தமிழ், தமிழினப்பற்று வேண்டுமே!

கே: தமிழினம் தன் சொந்த இராச்சியத்தில் உரிமையுடன் வாழ்வதற்கு தமிழர் கூட்டணி நடவடிக்கை எடுக்குமா?

ப: அந்த நடவடிக்கையை தமிழர் கூட்டணி எடுக்கும் என்ற நம்பிக்கையோடுதான் தமிழ் மக்கள் இன்று இருக்கிறார்கள்!

ஃ

இ. தமிழிராசன்,
இராகலை.

கே: குயுக்தியாரே நானும் நீரும் அடுத்தாண்டு முதல் ஈழத் தமிழ் நாட்டில் இருப்போமென்றே நான் நினைக்கிறேன் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஈழத் தமிழ் நாட்டில் இருந்தால் மட்டும் போதாது — சுதந்திரம் பெற்ற மக்களாகவும் நாம் இருக்கவும் வேண்டும் நண்பரே!

ஃ

சோதி சகுந்தலா,
திருநெல்வேலி.

கே: திரு. தர்மலிங்கம் எம். பி. யின் மோட்டார் வண்டியில் உள்ள தமிழ் ஸ்ரீயைக் கண்டு மிக்க மகிழ்ச்சி. அதே போல் மற்றும் தமிழ் மக்களும் தங்களது மோட்டார் வண்டிகளில் அவ்வாறு போட்டால் என்ன?

ப: போட்டால் மகிழ்ச்சிதான்! 'சிறீ' க்கார் வைத்திருப்பவர்களின் தன்மான உணர்ச்சியைப் பொறுத்த விடயம் இது!

ஃ

க. ச. நடராசா,
பதுளை.

கே: தமிழ் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ள மலையகத் தமிழரையும் அறைகூவி அழைக்கிறீர்கள். ஆனால் அவர்களோ குடியுரிமையற்றவர்களாக வாழ்கிறார்கள். இந்நிலையில், மொழிப் போராட்டத்தில் மலையகத் தமிழர்கள் கலந்து கொள்வது நலம் தருமா?

ப: தமிழ் தேசிய இனம் இனி மொழியுரிமைக்காக மட்டும் போராட முடியாது; முழுவிடுதலைக்காகவே போராட வேண்டும். தமிழ் ஈழம் முழுவிடுதலை பெற்றால், மலையகத் தமிழர்களும் அங்கு பூரண குடியுரிமைகளுடன் சுதந்திர மக்களாக வாழ முடியும்!

ஃ

ஆ. குமாரலிங்கம்'
நல்லூர்.

கே. திருகோணமலை துறைமுகத்தில் சீனக் கப்பலிலிருந்து ஆயுதங்கள் இறங்குவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன. இதன் மர்மம் என்ன?

ப: போகப் போகத்தான் தெரியும்......!

கே. காசி ஆனந்தன் சிறையில் வாடுகிறாரே அவரை எப்போது சிறையிலிருந்து மீட்பது. போராடியா? அல்லது வழக்காடியா மீட்பது?

ப: எதைச் செய்வதென்பதை தமிழர் கூட்டணி தீர்மானிக்கும்!!

ஃ

செ. முரளிதரன்,
காங்கேசன்துறை.

கே. தமிழர் கூட்டணி உருவாக்கிய ஆறு அம்சக் கோரிக்கையின் அடிப்படைத் திட்டம் என்ன?

ப: தமிழினம் இந்நாட்டில் சுதந்திர இனமாக வாழ வழி கோலுவது!

ஃ

கு. கைலைநாதன்,
காங்கேசன்துறை.

கே: 'சிமோல்' அவர்களுக்கு சென்ற கிழமைப் பத்திரிகையில் வெளிவந்த ஒரு சின்னக் கடிதத்தில் இருந்து இவர் இனியாவது சிந்தித்து செயல்படுவாரா?

ப: ''அறளை'' பெயர்ந்து போனவர்களால் சிந்திக்க முடியாதே!

ஃ

அ. அப்துல் லத்தீப்,
திருகோணமலை.

கே: கலைஞர் மு. க.வின் ஆட்சியில் குழப்பங்களுக்குக் காரணம் என்ன?

ப: குழப்பங்களை ஏற்படுத்தியேனும் கழக ஆட்சியைக் கவிழ்த்துவிட நினைக்கும் சுயநலக்கும்பலே காரணம்!

கே: பேரறிஞர் அண்ணா அவர்கள் ஈழத்திருநாட்டில் பிறந்திருந்தால்...!

ப: தமிழ்நாடு இப்பொழுதும் அறியாமையிலும்மூடத்தனத்திலும் அடிமை நிலையிலுமே மூழ்கிக் கிடந்திருக்கும்!

ஃ

ஆர். என். ராஜா,
466, இராமநாதபுரம்.

கே: முன்னாள் முதலை உறுப்பினர் எம். திருச்செல்வம் ஏன் தமிழர் கூட்டணிக் கூட்டங்களில் பங்குபற்றுவதில்லை?

ப: அவரிடமே உங்களது இந்தக் கேள்வியை சமர்ப்பிக்கிறேன்!

ஃ

ம. சத்தியநாதன்,
சுழிபுரம்.

கே: சிங்களவர் நம்மைப் பனங்கொட்டை சூப்பி என்று கேலி செய்தால் நாங்கள் அவர்களை என்ன மாதிரிக் கேலி செய்யலாம்?

ப: நாய் குரைத்தால் திருப்பிநாம்குரைக்கத்தான் வேண்டுமா?

ஃ

அ. இயூஜின்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கே: சந்தைக்கடை ஊழலில் பெரிய பெருச்சாளி பிடிபடுமா?

ப: பலநாள் கள்ளன் நிச்சயம் ஒரு நாள் அகப்படவே செய்வான்!

ஃ

க. ஜெயன்,
மாதகல்.

கே: தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டுமானால் முதலில் எதைத் தியாகம் செய்ய வேண்டும்?

ப: சுயநலத்தை!

ஃ

எஸ். அரியரத்தினம்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் கூட்டணியில் சேராது தனிமரமாகத்தான் நிற்பேன் என்று அடம்பிடிக்கும் கட்சியொன்று ஐந்தாண்டுகளுக்கு போராட்டத்தை ஒத்திவைக்கும்படி கூறியதேன்?

ப: அந்தக்கட்சி தலைவரின் மகன் இங்கிலாந்தில் படிக்கிறார்; அவரது படிப்புச் செலவுக்கு தந்தை இங்கிருந்து பணம் அனுப்ப வேண்டும்—அதற்கு அவர் சட்டத் தொழிலை சரிவரச் செய்ய வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக்கு சென்றால் இதெல்லாம் என்ன ஆவது? அத்தோடு அந்தக்கட்சிப்பத்திரிகையை அச்சிடுவதற்கு பணம் கொடுக்கும் முதலாளிக்கோ ஏராளமான சொத்துக்கள் கொழும்பில் உண்டு. இதையெல்லாம் காப்பாற்றுவதைவிட போராட்டம் பெரிதா அவர்களுக்கு?

ஃ

'அப்பு'
பிரவுண்றோட், நீராவியடி.

கே: வங்கத்து உதாரணம் பங்கத்தையே தரும் என்கிறாரே நாவேந்தன்—

ப: நாய் வேந்தர்களுக்கு ஒரு எலும்புத்துண்டு போதுமே--அவர்களுக்கு சுதந்திரம் எதற்கு?

கே: தமிழ் நாடுகிடைத்தவுடன், தபால் மந்திரியாக குமாரசூரியரையே நியமிப்பீர்களா?

ப: நான் நியமிக்காவிட்டாலும் அவர் விடவா போகிறார்?

ஃ

கே. பாலச்சந்திரன்,
கட்டுகாஸ்தோட்டை.

கே: இன்றைய தமிழ் இனத்தின் நிலையைக் கெடுத்த இரண்டு தமிழ்ப்பா. உ. க்களும் இப்போ என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்?

ப: நடைப்பிணமாகக் காட்சிதருகிறார்கள்!

# இலக்கிய உலகில் இரண்டு இழப்புகள்!

வேதாளத்தை எங்கே பல வாரங்களாகக்காணவில்லை — மீண்டும் புளிய மரத்தில் ஏறிவிட்டதோ என்று வாசகநேயர்களும் இலக்கிய நண்பர்களும் கேட்டுவருவது வேதாளத்தின் காதில் விழாமலில்லை.

விக்கிரமாதித்தன் காலத்து வேதாளம்தான் புளியமரத்தில் ஏறும்— இந்த இலக்கிய உலக வேதாளம் எங்கும் ஓடாது —யாருக்கும் அஞ்சாது. இலக்கிய உலகுப் போலிகளை சாடவும், உண்மை இலக்கிய வாதிகளை பாராட்டவும் என்றும் பின் நிற்காது.

வேதாளத்தையும் ஈழத்து இலக்கிய உலகையும் கண்கலங்கித்துடித்திட வைத்த சம்பவமொன்று அண்மையில் நிகழ்ந்துள்ளது. அதுதான் மதுரகவி இ. நாகராசன் அவர்களின் மறைவுச் செய்தியாகும்.

என்றென்றும் இளமைத்தோற்றத்துடன் வாழ விரும்பியோ என்னவோ அந்த இனியகவிஞன் நம்மையெலாம் தவிக்க விட்டு விட்டு பறந்துவிட்டான். சுவை சொட்டும் தமிழில் அவன் பாடி வைத்துள்ள கவிதைகள் தாம் எத்தனை எத்தனை...?

''நமக்குத் தொழில் கவிதை.... நாட்டுக்குழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்...'' என்ற பாரதியின் வாக்குப் படி மிடுக்குடன் வாழ்ந்தவன் அவன்!

1968ம் ஆண்டு தமிழ் நாட்டில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக் கவிதைப்போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்று— ஈழத்தமிழ் நாட்டுக்குப்




புதுப்புகழ் கொண்டு வந்தவன் அவன்!

இலட்சியக்கவிஞன் நாகராசன் நம்மைவிட்டுப் பிரியவே மாட்டான்— அவனது கவிதைகளுக்கூடாக அவன் நம்மிடையே என்றென்றும் வாழ்ந்து கொண்டுதான் இருப்பான்.

ஆயினும் மறைந்த அத்தமிழ் கவிஞனின் குடும்பத்தை வாழ வைப்பது தமிழ்ப்பற்றுள்ளோர் இலக்கிய ரசிகர்கள், அன்பர்களது கடனாகும்! இதற்கென யாழ்ப்பாணத்து இலக்கிய நண்பர்கள் ஒரு குழுவை நியமித்து பணம் திரட்டி வருகிறார்கள்.

இக்குழுவின் தலைவராக யாழ் மாநகராட்சி உறுப்பினர் நா. த. செல்லத்துரையும், கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை செயலாளராகவும், கவிஞர் வி. கந்தவனம் பொருளாளராகவும் பணிபுரிகிறார்கள். இந்நிதிக்கு அன்பளிப்பு அனுப்புவோர் கவிஞர். வி. கந்தவனம் குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்னும் முகவரிக்கு அனுப்பலாம்.

தமிழுக்காகவே வாழ்ந்த கவிஞன் குடும்பத்தை கைதூக்கி விடுதல் தமிழன்பர்களின் உடனடிக் கடமையாகும்!

ஃ ஃ

ஈழத்து கவிதை உலகுக்கு கவிஞர் நாகராசனின் பிரிவினால் இழப்பு என்றால் தமிழ் நாட்டுக் கவிதையுலகுக்கும் இந்த வாரம் ஒரு பெரும் இழப்பு நேர்ந்துள்ளது.

நாமக்கல் கவிஞர் என்று அன்புடன் அழைக்கப்படும் தமிழ் நாட்டின் ஆஸ்தான கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தனது 85வது வயதில் இயற்கையடைந்துள்ளார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற இந்த முதுபெரும் கவிஞரை தி. மு. கழக அரசு உதவி நிதி அளித்து கௌரவித்து வந்தது. அண்ணா, கருணாநிதி ஆகியோரிடம் மிகுந்த ஈடுபாடுள்ளவர் இவர்.

'தமிழன் என்றோர் இனமுண்டு' என்ற பாடலும் 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாடலும் இந்தக் கவிஞரை எப்பொழுதும் இதயத்தில் வைத்திருக்கச் செய்யப் போதுமானவை.

ஃ ஃ

கவிஞர் இ. நாகராசன் அவர்களைப்பற்றி வன்னியூர்க் கவிராயர் 'காலத்தாற் சாகாக்கவிஞர்' எனும் தலைப்பில் பின்வரும் இரங்கற்கவிதைகளை அனுப்பி வைத்துள்ளார்:-

இந்நாடே போற்றும் இனிய மதுரகவி!
அன்னைதமிழாள்புதல்வ! அன்பிதயம் - செந்நீரும்
நேத்திரங்கள் கண்ணீரும் நித்தம் சொரிந்திட ...
விண்
யாத்திரை நீ சென்றாய் அந்தோ!

நாவல், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள்
யாவற்றி னுந்திறனர் நற்றமிழின் — காவலனே
காலத்தாற் சாவாக் கவிநாக ராச, உனை
ஞாலத்தே காண்பதெந்த நாள்!

தமிழ்வாழு மட்டுமிந்தத் தாரணியில் நீநின்
அமிழ்தினி தாமுன்கை வண்ணத் —
தமிழ்ப்படைப்பில்
சந்தமும் வாழ்வையுண்மைதான்; எனினும் நின்
இடத்திற்
கெந்தவகை செய்திடலாம் ஈடு!

எச்சிற் சலுகைகளென் றிட்டவெலும்
பைப்பொறுக்கப்
பச்சோந்தி யாகா தினத்துரிமை — நிச்சயமாய்க்
காப்பாற்று மெண்ணங் கனவிலுங் கொள்கவிஞ!
பார்ப்பதுனை யெந்நாளிப் பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈழத் தமிழர் சுதந்திரப் போருக்கு தமிழ்நாடு அரசு வழித்துணையாக வேண்டும்'

— தமிழ்நெறி.

''சரித்திர காலம் தொட்டே தமிழகவரலாற்றைப் புரட்டும்போது ஆங்காங்கே சில புல்லுருவிகளும் எட்டப்பன் பரம்பரையினரும் தோன்றித் தோன்றி மறைந்ததை வரலாறே கூறுகிறது. எக்காலத்தும் தொன்று தொட்டுவரும் தமிழினத்தின் சாபக்கேடு இப்போது மட்டும் எப்படி மறைந்துவிடும்?

''இத்தமிழினத்தின் துரோகிகள் இலங்கையில் கடையைப் பரப்பியுள்ளனர்.

''சமீப காலமாக ஈழத் தமிழினம் தனது விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகிறது. இனப்பற்றும் மொழிப்பற்றும் இன்றிபதவி வெறி மட்டுமே கொண்ட சில தமிழினப் புல்லுருவிகள் ஆட்சியாளருக்கு உறுதுணை என்பது தமிழினமே வெட்கப்பட வேண்டியதொன்று.

''தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடேன்! என முழங்கிய தமிழர்கள் மத்தியில் தோன்றிவிட்ட இப்புல்லுருவிகளின் துரோகப் போக்கினால் வாடியிருக்கும் ஈழத் தமிழினத்துக்குத் தமிழக மக்களின் ஆதரவும், தமிழக அரசும் தக்கதோர் வழித்துணையாக நிற்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

''அரசியல்கட்சி வேறுக இருக்கலாம்—மதம் வேறுக இருக்கலாம். தாய்மொழிப் பற்றும் இனப்பற்றும் இல்லாமல் தன் இனத்திற்கும் தாய் மொழிக்கும் துரோகம் செய்யும் இத்தகைய பதவி வெறியர்களை ஈழத் தமிழர்கள் இனம் கண்டு, அவர்களின் துரோக எண்ணத்திற்குத் தக்கதோர் பேரடியாகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஈழந் தமிழ்த் தலைவர்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டுமெனத் தமிழ் நெறியும் தமிழக மக்களும் விரும்புகின்றனர்.''

—'தமிழ்நெறி'(1-8-72)

## மக்கள் குரல்

சென்ற சில வாரங்கட்கு முன் மாவிட்டபுர கந்தசுவாமி ஆலயத்தின் மடம் ஒன்றில் பிரபல இளம் வழக்கறிஞர் ஒருவர் ஓர் அன்னதானம் நடாத்தி உள்ளார். அவ்வன்னதானத்திற்கு நண்பர்கள் உறவினர்கள் பிரமுகர்கள் தோழர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அதே வேளை சிறுபான்மை சமூக நண்பர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். ஆனல் மட பொறுப்பாளர் சிறுபான்மையினரை உள்ளே செல்ல விடாது தடுத்து நிறுத்திவிட்டார். சமூக சீர்திருத்தவாதியும் சிறந்த பேச்சாளனும், சிறுபான்மையினரின் போராட்டங்கட்கு தலைமை தாங்குகின்றேன் என கூறி வாயால் சோசலி உணவு அருந்தினர். பிரமுகரோ உள்ளே இருந்து உணவருந்தினர். இப்படிப்பட்ட மாவீரனு புரட்சி வீரன்? இவரின் சோசலிசத்தை கண்டால் லெனின் பொலிடோல் குடித்துவிடுவார்.

செஞ்சோற்றுக் கடனுக்காகத்தனது உண்மையான இலட்சியத்தை காற்றில் பறக்கவிட்டு 'கோவில் திறப்பு கொழும்பில்' என்றவர் சமத்துவமே தமது லட்சியம் என்பவர், போராட்டமே சிறந்தது என்று கூறும் சின்ன மௌலானவுடன் மேடை மீது இருந்து சால்வை வேட்டி சந்தணப் பொட்டுடன் காட்சி கொடுத்தார்.

அதே பிரமுகர் இன்று சிறுபான்மையினர் தம்மை ஆலயத்துள் அழைத்து செல்லுங்கள் என்ற போது மத நம்பிக்கை இல்லை என்கிருர் — அன்று எப்படி மத நம்பிக்கை இவருக்கு ஏற்பட்டது?

## சிறுபான்மைத் தமிழர் வெளியே தள்ளப்படுவது சின்ன பிரச்சினையா?

### வி. பி. யின் சமதர்மம் சந்தி சிரிக்கிறது!

சம் சமத்துவம்; வெள்ளைப் பூனையும் கறுப்பு பூனையும் ஒரு தாயின் பிள்ளை என்றெல்லாம் கூறும் பிரமுகரும், அன்னதானத்தில் பங்கு கொண்டார்.

மட பாதுகாவலர், 'ஐயா தாங்களும் அன்னதானத்தில் கலந்து கொண்டீர்களா என நளினமாக கூறி உள்ளே செல்லுங்கள் என்று கூறினர். ஐயா சிறுபான்மையினரை எப்படி உள்ளே விடுவது என கூறினர் மடப் பாதுகாவலர். குறித்த பிரமுகரோ 'இது சிறு பிரச்சினை. எங்கிருந்தாவது உணவு அருந்தினல் சரி' என்றுர்.

அன்னதானம் வழங்கிய இளம் வழக்கறிஞர் சிறுபான்மை தமிழர்கள் இருவருடன் வெளியே இருந்து இம்மாமேதை, சிறுபான்மையினர் வெளியே தள்ளப் படும் போது அதைச் சிறு பிரச்சினை என்றுல் இவரின் போராட்டம் கடதாசிப் புலி போன்றதே. இவரின் சமத்துவம் சாவின் சமத்துவமே தவிர உயிருடன் அல்ல.

கும்பிளாவளை பிள்ளையார் ஆலயத்திற்கு தம்மை அழைத்து தலைமை தாங்கி செல்லும்படி சிறுபான்மையினர் கேட்டபோது மதத்தில் தமக்கு நம்பிக்கையில்லை என்றுர்.

அதே வேளை, இவ்வாலயத்திற்கு தந்தை செல்வாவுடன் போட்டி போட்டு இந்தியாவில் இருந்து சின்ன மௌலானவை அழைத்தது அனேகருக்கு ம[illegible] தமிழர்கட்கு கிறிஸ்தவன் தலைமை தாங்குவது பிழை என்பவர், தான் சார்ந்த மக்களுக்கும் கட்சிக்கும் சிறுபான்மையினரையும் ஏமாற்றி செப்படி வித்தை காண்பிப்பது சரியா? இதற்கு பதில் என்ன கூறப் போகிறுர் சமூகத் தலைவன்?

இந்த பிரமுகர்தான் வி. பி. என செல்லமாக அழைக்கப்படும் விளையாட்டு பொம்மை. இந்தப் பொம்மையின் பம்மலாட்டத்தை பொது மக்கள் அறியாமலா விடப் போகிறுர்கள்.

— க. சங்கரசிவம்,
மாவிட்டபுரம்.

## வாசகர் கருத்து

அன்பு அண்ணு,

தங்கள் 30-7-72 அரசியல்மடல் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது மட்டுமல்ல —என்னை ஒரு முறை செயலிழக்க செய்துவிட்டது.

காட்டுயானையின் கொடூர சிந்தைக்கு தாங்கள் இரையாகியிருந்தால், என்று எண்ணும்போது முப்பது இலட்சம் தமிழ் மக்களுக்கு பதில் சொல்ல யார் இருக்கிறுர்கள் என எண்ணுகிறேன்.

அண்ணு, தங்களுக்கு ஒரு போதும் தீங்குகள் விளையவே விளையாது. நாம் சிங்கள ஆட்சியாளரால் கொடுமைப் படுத்தப்படும்போது ஆண்டவன் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறுன் என எண்ணினேம். இல்லை, நான் இருக்கிறேன், பொறுமையாக இருங்கள், என்றுநேரவிருந்த விபத்தொன்றிலிருந்து தங்களைக் காப்பாற்றியதன் மூலம் உணரவைத்து விட்டான்.

—எப். புரட்சிகரன்,
முள்ளியவளை.

ஃ

அன்புள்ள கோவை அண்ணு,

தாங்கள் சுதந்திரனில் எழுதிவரும் 'அண்ணுவின் தமிழ் நாடுகண்டேன்' என்ற தொடர்கட்டுரை மிகவும் நன்ருக இருக்கிறது. கட்டுரையைத் தொடர்ந்து வெளியிடவேண்டும். இதுவே என்னுடையதும், மற்றேருடைய அவாவும் ஆகும்.

—அன்புத் தம்பி,
அடம்பனூர் இளவல்.

ஃ

கோவை அண்ணு,

உணர்ச்சிக் கவிதைகளால் எமைக்கவர்ந்த அண்ணன் காசி ஆனந்தன் அவர்களின் உள்ளத்தில் சிந்தனை சுழன்று திசையின்றிப் பறக்க அவை வெளிவர முடியாது சிறைச் சாலைச் சுவர்கள் தடுக்கின்றன. இந்த வேளைதனில் தங்களது அரசியல் மடலும் சில சமயங்களில் திட்டப்படாது விடுவது எமைப் பெரிதும் வருததுகின்றது. எனவே தங்கள் அரசியல் மடலைத் தவருது ஒவ்வொரு இதழிலும் வரைவீர்களாக.

—நாக. பஞ்சாட்சரம்,
நயினதீவு.

ஃ

கனம் ஆசிரியர் அவர்களுக்கு,

கடந்த 13-8-72 சுதந்திரன் இதழில் 'சீனமும் சிங்களமும்' என்ற தலைப்பிலான தங்கள் 'அரசியல் மடல்' கண்டு அகமகிழ்ந்தேன். தமிழர்களின் கடமையை நினைவூட்டியுள்ளதோடு, அரசியலார்க்கு வேண்டிய அறிவுரைகளையும் வழங்கியிருக்கிறீர்கள். தாங்கள் வழங்கியுள்ள அறிவுரையினை அரசியலார் ஏற்றுக்கொள்வார்களோ? இல்லையோ? தெரியாது. எனினும், அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதிலும் அல்லது நிராகரிப்பதிலுமே இந்நாட்டின் விதி தங்கியுள்ளதென்பது மறுக்க முடியாதவொரு உண்மை.

இந்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டினை ஆயுதமூலம் ஏற்படுத்த அரசாங்கம் திர்மானித்திருப்பதைக் கண்டு வியப்படைகிறேன். ஏனெனில், ஒருமைப்பாடு என்பது பரஸ்பரம் அன்பு செய்வதால் ஏற்படக்கூடிய ஒன்றே தவிர, பலாத்காரத்தைப் பிரயோகித்து ஏற்படுத்தக்கூடிய ஒன்றல்ல. அன்பு என்ற கருவியின் மூலம் மட்டுமே ஏற்படுத்தக்கூடிய ஒருமைப்பாட்டை, போர்க் கருவிகளின்மூலம் ஏற்படுத்த முயன்ருல் அது விவேகமான தாக இருக்க முடியாது. துப்பாக்கியைக் காட்டி ஒரு தும்பைமொட்டினைக் கூட மலரவைக்க முடியாது. உண்மை இவ்வாறிருக்க, அடக்குமுறையைக் கையாண்டு ஒரு இனத்தின் சுதந்திரத்தைப் பறிக்க முயன்ருல், அதனல் ஏற்படுகின்ற விளைவுகளை வரலாறுகள் விரிவாகவிளக்குகின்றன. எந்தவொரு பிரச்சினைக்கும் அடக்குமுறையோ, பலாத்காரமோ பரிகாரம் தேட மாட்டாதென்று நம் தமிழ்த் தலைவர்கள் அடிக்கடி வலியுறுத்துவதை அரசாங்கம் இனியாவது ஒப்புக்கொள்ள வேண்டும்.

அழகானதொரு பாகிஸ்தான் நாட்டில் அடக்குமுறையின் மூலம் ஒருமைப்பாட்டைஏற்படுத்தமுயன்று அதனையொரு அங்கவீன நாடாக்கி விட்டார் அதன் முன்னைய ஜனதிபதி யஹ்யாகான்.

தன் குடியேற்ற (காலனி) நாடுகளில் அடக்கு முறையைக் கையாண்டு ஆதிக்கம் செய்ய முயன்று, என்றும் மறையாத சூரியனை மறையச் செய்துவிட்டது பிரிட்டிஷ் பேரரசு.

பசியினுல் பதறியெழுந்த மக்களுக்கெதிராகப் பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விட்டதனுல் தன்தலையையே இழந்தான் பிரான்ஸிய அரசன் பதினுரும் லூயி.

எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் நியாயமான கோரிக்கைகளுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் பலாத்காரமோ, அடக்குமுறையோ தம்மை ஏவியவர்களையே சூறையாடி விட்டதாகத்தான் வரலாறு உள்ளதே தவிர, ஏவிவிடப்பட்டவர்களைச் சூழ்ந்து அழித்ததாக வரலாறு இல்லை. இந்த உண்மையை எம்நாட்டு அரசியல் தலைவர்கள் எனப்படுவோர் அறியாதவர்கள் அல்லர் இருப்பினும்சில சந்தர்ப்பங்களில் சில உண்மைகள் ஏனே மறக்கப்பட்டு விடுவதுண்டு. இத்தகைய ஞாபக மறதி இவர்களிடமும் உள்ளதா? இல்லையா? என்பதற்கு எதிர்காலம்தான் பதில் கூற வேண்டும்.

உண்மையுள்ள,
—ஆ. சேயோன்,
பண்ணுகம் தெற்கு,
சுழிபுரம்.

ஃ

## பாரினில் மறைவதில்லை!

கண்ணிற் கருமணியே
கற்பகமே இன்தமிழர்
விண்ணிற் பதித்திட்ட நல்
வெண்மதியே-சோலைநீ
கண்ணிற் சிறந்த நம்
கனி மொழி தன்னை இம்
மண்ணிற் பரப்ப
மா நந்தி தடுக்கிற தோ?

பாரி வளர்த்திட்ட நம்
பைந்தமிழ் தன்னை
காரி உமிழ்ந்திடும்
கடையரே கேளீர்-வானில்
கருமுகில் யாவும் கூடிக்
கழித்து நின்றிட்டாலும்
பருதியின் பட்டொளி
பாரினில் மறைவதில்லை!

—வளலாயூர்
வளலைத்தம்பி செ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் 3—9—72

## எண்ணம்

# ஒப்பந்தத்தை மீறியது இலங்கை

'உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்'

நல்ல, கவர்ச்சியான சுலோகம் இது — சுலோகம் மட்டுமல்ல பின்பற்றிட வேண்டிய ஒரு சிறந்த கொள்கையுமிது என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

இந்தக் கோஷத்தை 'சோசலிசவாதிகள்' என்று தம்மை அழைத்துக்கொள்வோர் அடிக்கடி எழுப்பி வருகிறார்கள்!

உண்மையில் ஒரு சிறந்த சோசலிசக் கொள்கை இது என்பதிலும் தடையில்லை.

இந்நாட்டிலும் சோசலிசம் பற்றி வாய்கிழியப் பேசுவோர் ஏராளமானோர் இருக்கிறார்கள்.

ஊராள்வோரே 'சோசலிச வாதிகள்' என்று தமக்குத் தாமே பட்டம் சூட்டிக் கொள்ளுகிறார்கள்.

லெனின், ட்ராஸ்கி போன்ற தலைவர்களின் வாரிசுகள் தாமே என்று கடந்த 30, 40, ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டில் மேடைக்கு மேடை முழங்கிவரும் இடதுசாரிகளான லங்கா சமசமாஜக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் சேர்ந்தே இன்றைய முக்கூட்டணி அரசாங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள்; அமைச்சர்களாகவும், அரை அமைச்சர்களாகவும் இவர்கள் பதவிகளிலும் உட்கார்ந்து பவனி வந்துகொண்டிருக்கிறார்கள்—

ஆனால் இந்த இடதுசாரிக்கட்சிகளையும் உள்ளடக்கிய இன்றைய அரசின் புதிய நடைமுறைச்சோசலிசக்கொள்கை என்ன தெரியுமா?

**உழைப்பவனுக்கு நிலம் கிடையாது; தொழிலாளிக்கு வாழ்விடம் கிடையாது!**

என்பதுதான்.

ஆம், அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிலச்சீர்திருத்த மசோதா மலைநாட்டுப்பகுதியில் இந்நாட்டு மண்ணுக்காக உழைத்துவரும் தோட்டத்தொழிலாளர்களுக்கு நிலம் கிடைக்கும் வாய்ப்புக்களை முற்றாகப் பறித்து விட்டது.

தோட்டத்தொழிலாளர்களுக்கும் நிலம் கிடைக்கக்கூடிய வகையில் இம் மசோதாவில் முதலில் இடம்பெற்றிருந்த விதியை, மலைநாட்டுச் சிங்களப் பிரதிநிதிகளின் நெருக்குதலுக்கு அடிபணிந்து — அரசு வாபஸ் பெற்று விட்டது!

முழுக்க முழுக்க இனவாத அடிப்படையிலேயே இது நடைபெற்றிருக்கிறது — தொழிலாளர்களின் உரிமை குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கிறது.

**அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினால் தான் இந்த மண்ணுக்காக உழைத்துழைத்து ஓடாக தேய்ந்த அவர்களது வாழ்வில் எட்டி உதைத்திருக்கிறது அரசு!**

தோட்டத்தொழிலாளர்களுக்கு மலைநாட்டுப் பகுதியில் நிலம் கிடைக்கும் வாய்ப்பை இல்லாமற் செய்யும் துரோகத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள் தொழிலாளர்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்து வந்த கம்யூனிஸ்டுகளும் சமசமாஜக்கட்சியினரும்!

நல்லவேளையாக லெனினும், டிராஸ்கியும் இன்று உயிரோடிருக்கவில்லை — இருந்திருந்தால் தமது சீடர்களின் போக்கினைக்கண்டு இரத்தக்கண்ணீர் வடித்திருப்பார்கள்!

காடாகக்கிடந்த மலைநாட்டுப்பகுதியை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியமைப்பதற்கு தலை முறை தலை முறையாக தமது இரத்தத்தையும், வியர்வையையும், ஏன் உயிரையும் கொடுத்து வருபவர்கள் 15 இலட்சம் தமிழ்தோட்டத்தொழிலாளர்கள். இந்த ஏழைத்தொழிலாளர்களுக்கு நிலம் இல்லையென்றால் சோசலிசம் பற்றிப் பேச இந்த அரசுக்கு என்ன அருகதையிருக்கிறது?

**இந்நாட்டில் நடப்பது சோசலிச ஆட்சியல்ல; சிங்கள 'இஸ' சர்வாதிகார ஆட்சியே இங்கு நடைபெறுகிறது. தமிழர்களின் மொழியையும் நிலத்தையும், பண்பாட்டையும் கலை கலாசாரத்தையும், தனித்துவத்தையும் அழித்தொழித்து விடுவதொன்றே முக் கூட்டு ஆட்சியாளரின் முடிவான 'சோசலிசக்' கொள்கையாகும். இதை ஒவ்வொரு தமிழனும் — குறிப்பாக ஒத்துழைப்பை இன்னும் நம்பிவரும் தமிழர்கள் —புரிந்து கொள்ள வேண்டும்.**

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிலம் கிடைக்கும் வாய்ப்பை பறித்ததன் மூலம் இலங்கை அரசு சிறிமா — சாத்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையையே தகர்த்தெறிந்து விட்டது; மீறி விட்டது!

இலங்கை, மூன்று இலட்சம் 'நாடற்ற' இந்திய வம்சாவழியினருக்கு பூரண பிரஜாவுரிமை வழங்க வேண்டுமென்பது இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் இந்த மூன்று இலட்சம் பேரும், ஏனைய இலங்கைப் பிரஜைகளைப் போலவே பாரபட்சமின்றி சமத்துவத்துடன் நடத்தப்படுவார்கள் என்பதே இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையாகும்.

ஆனால், அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிலச்சீர்திருத்த மசோதாவின்படி இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படும் தோட்டத்தொழிலாளர்களுக்கு கூட நிலம் கிடைக்கும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. இது இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதிராக கடைபிடிக்கப்படும் கடைந்தெடுத்த பாரபட்ச நடவடிக்கையாகும். சி—சா. ஒப்பந்தத்தை மீறிய செயலாகும் — குழிதோண்டிப் புதைப்பது போன்றதாகும்!

**ஸ்ரீமா — சாத்திரி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மற்ற நாடான இந்தியா, இலங்கையின் இந்த ஒப்பந்த மீறல் நடவடிக்கைக்கு எப்படிப் பதில் அளிக்கப்போகிறதென்பது இன்னும் தெரியவில்லை**

செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறுவது சிங்களத் தலைவர்களுக்கு ஒன்றும் புதுமையானதல்ல — தமிழ் மக்களுடன் எத்தனையோ அரசியல் ஒப்பந்தங்களை செய்து விட்டு, பின் அவற்றை மீறிய ''அனுபவசாலிகள்'' அவர்கள்!

ஆனால், செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு மாறாக இலங்கையின் துரோகத்தனமான—பண்பாடற்ற—விசுவாசமற்ற போக்கை இந்திய அரசும், இந்திய மக்களும் அனுமதிக்கப்போகிறார்களா?

# யாழ் விநோத களியாட்டு விழா அமைப்பாளருக்குக் கரிப்பூச்சு!

## மக்கள் எதிர்ப்பினால் துரோகிகளின் திட்டம் தவிடு பொடியாயிற்று!

யாழ். விநோத களியாட்டு விழா! கமத்தொழிற் கைத்தொழிற்பொருட்காட்சி!

—மேற்படி பொருட்காட்சி சில மாதங்களுக்கு முன்பே திட்டமிடப்பட்டது. உத்தேச கட்டடத்தில் களியாட்டு விழா திட்டமிடப்பட்டபோது அரசியல் சூழ்நிலை அவ்வளவு பாதகமாக இருந்ததில்லை. நீறு பூத்த நெருப்பாக தமிழ் மக்கள் இருக்கிறார்கள் என்பதை உணர முடியாதவர்களால் ஆழமறியாது காலை விட்டு இப்போது அவதியடையும் நிலையில் உள்ளார்கள் களியாட்டு விழா அமைப்பாளர்கள்.

தாலியறுப்பாருக்கும் குடிகேட்டுக்கும் சொர்க்க பூமியாக விளங்கும் களியாட்டு விழாவில் சூதுக்கு இப்போது இடமில்லை. கொள்ளை கொள்ளையாகப் பணம் கறக்கலாம் என்ற நப்பாசையால் உந்தப்பட்டு களியாட்டு விழாவுக்கு காற்கோள் இட்டவர் தலையில் மின்னுமல் முழங்காமல் இடியேறு வீழ்த்தது போல் சூதாட்டங்களுக்குப் போடப்பட்ட தடை அமைந்து விட்டது.

மக்களிடமோ பணம் இல்லை. விலைவாசிகளோ ஏறுமாறாக உள்ளது. வாழ்க்கையை ஓட்டுவதற்கே ததுங்கணதோம் தாளம் போடும் பாட்டாளிகளிடம் களியாட்டு விழாவில் உதாசீனச் செலவு செய்ய அப்படியென்ன கொட்டிக் கிடக்கிறதோ!

எல்லாவற்றிற்கும் மேலாக துரோகிகள் தொட்டதெல்லாம் நாசமாகப் போகவேண்டும் என்று எண்ணிச்செயல்படும் அளவுக்கு துரோகிகளை மக்கள் இனம் கண்டு வைத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களது மனித உரிமைகளின் பாற்பட்ட ஜய நாயக ஆதார உரிமைகளுக்கு கொள்ளி வைக்கும் புதிய அரசமைப்புத் திட்டத்தை ஆதரித்து மாநகர சபை மண்டபத்தில் 20-5-72ல் நடந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கியதுடன், கொழும்பில் நடந்த கொண்டாட்டங்களில் நேரில் கலந்து கொண்டவர் யாழ். மேயர் துரையப்பா.

அத்துடன் விட்டாரா? தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் அடங்கலும் துக்கம் அனுட்டித்து கறுப்புக்கொடி பறக்கவிட்ட போது—மாணவர் பேரவை பாடசாலைகளைத் தொடர்ந்து நான்கு நாட்கள் பகிஷ்கரித்த போது—யாழ். மேயர் கட்டளைப்படி மாநகர சபை மண்டபத்திலும், புதிய மாதிரிச் சந்தைக் கட்டிடத்திலும் சிங்கக் கொடி பறக்க விடப்பட்டதைத் தமிழ் மக்கள் அதற்கிடையில் மறந்தா போய்விட்டார்கள்?

அப்பேற்பட்ட, தமிழ் இனத்தைக் கருவறுக்கும் ஒருவர் பெயரால் அழைக்கப்படும் விளையாட்டரங்கு நிதிக்குப் பணம் சேர்க்கும் களியாட்டு விழாவுக்கு மானம் உள்ள தமிழர் யாரும் போவார்களா? முகத்துக்கு அஞ்சி விபச்சாரம் புரியும் பேர்வழிகள், அடிமைகள் அடிவருடிகள் போவார்கள். ஏனையோர் தூரவே விலகி நிற்பர்.

வந்தோர் யாவருக்கும் பாய்விரித்துப் பழகிய நாள் இதழ்கள் களியாட்டு விழாக் குறித்த பொய்ச் செய்திகளைப் பிரசுரிக்க முற்படலாம். உண்மையென்ன?

பொப் இசை காபரே நடனம் வார இறுதியில் இடம் பெற்றும் பயனில்லை. ஆள் சேரவில்லை? தென்னிந்திய திரைப்பட நடிகர்களில் செல்வாக்குள்ள யாவரும் மானமற்றவர்களா களியாட்டு விழாவில் கலந்து கொள்வதற்கு?

எனவேதான் நூற்றி தொண்ணூற்று ஐந்துபேர் மட்டுமே முதல் நாள் யாழ். விநோத களியாட்டு விழாக் காண குவிந்தனர் அமோகமாக! பாவம் துரையப்பா ஏன்தான் நல்லூரான் திருவிழா முடியுமட்டுமாவது களியாட்டு விழாவை ஒத்தி வைக்காது போனேம் என்று இப்போது தவிக்கிறாராம்! இந்து மக்கள் முருக பக்தர் செய்துவரும் பகிஷ்காரம் கண்டு.

மாணவர் பேரவை போர்க்கோலம் பூண்டு நகர் அலங்கோலமாகும் வகையில் ஒட்டிவரும் சுவரொட்டிகளின் ஈரம் உலருமுன்பே அவற்றை அப்புறப்படுத்தி யாழ் நகரின் அழகைப் பாதுகாத்துப் பேணுகின்றார்களாம்.

இப்படி எதிர்ப்பும் புறக்கணிப்பும் பகிஷ்காரமும் வலுவடைந்துவரும் நிலையில் செய்வதறியாது திகைக்கிறார்கள் களியாட்டு விழா அமைப்பாளர். ஆயிரக்கணக்கில் பணம் செலவிட்டாயிற்று. ஆரம்ப செலவுகளே தலைக்கு மேலே. இனி லைட்டுக்கு நாற்பதாயிரம் அளக்கவேண்டும். விளையாட்டரங்கை வளைத்துவர அடைப்பு அமைத்தமைக்கு ஒருசில ஆயிரம் கொட்டவேண்டும். இப்படியே குத்துவிளக்கில் கணக்குப் பார்த்தால் ஒரு இலட்சத்துக்குமேல் நட்டங் காட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதற்குமுன் நடைபெற்ற களியாட்டு விழாக் கணக்குகள் சபையின் கணக்கல்ல என்ற சாக்கில் கணக்காளர் நாயகத்தால் பரிசோதனையிடச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே இம்முறை மட்டும் நட்டத்தை மாநகர சபையின் தலையில் எப்படிச் சுமத்துவது? இப்படித் திகைக்கிறார்கள் களியாட்டு விழா அமைப்பாளர்.

களியாட்டு விழாக்கமிட்டி வரையறுத்த ஒருதாபனமா? இல்லையேல் நட்டம்போன தொகை அமைப்பாளர்களின் தனிப்பட்ட சொத்துக்களிலும் இருந்து அறவிடப்படுமா? என்ற புதிய கேள்வி முளைத்துள்ளது. இதனால் ஒவ்வொருவராக அமைப்பாளராக ஆரம்பத்தில் சேர்ந்திருந்தவர்கள் இப்போது கழன்றுகொண்டேயிருக்கிறார்கள்.

யாழ். விநோத களியாட்ட விழாக் குழுவில் சபை உறுப்பினர்தானும் அங்கத்தவர்களாக இடம்பெறுததால் போலும்—களியாட்டு விழா திறப்பு விழாவை இரண்டொரு சபை உறுப்பினர் தவிர ஏனையோர் யாவரும் முழுதாக பகிஷ்கரித்தார்கள்.

நல்லூர் கந்தன் விழா முடியுமுன்பு களியாட்டு விழா ஆரம்பிக்கப்பட்டதை ஆட்சேபித்த சபையின் இந்து உறுப்பினர் களியாட்டு விழாப் பக்கமே தலை காட்டவில்லை. இருந்தும் இப்போது அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள் தாம் யாழ். விநோத களியாட்டு விழா நஷ்டத்தைப் பகிர்ந்து கொள்ளவேண்டியிராதென்பதால்.

— அவதானி.

## கொழும்பு இளைஞர்களின் எழுச்சி!

மத்திய கொழும்பு வாழ் தமிழ் இளைஞர்களை ஒன்று கூட்டி அவர்களின் தமிழ்ப் பற்றையும், தீவிர எண்ணத்தையும் அறிய கொச்சிக்கடை ''ஈழமணி முற்போக்கு இளைஞர் சங்கம்'' கடந்த (27.8.72) காலை பத்து மணிக்கு மேற்படி சங்கத் தலைவரும், தீவிர தமிழரசு அபிமானியுமாகிய என். பி. ஜெனிப்பட் பெர்னாந்து தலைமையில் மேட்டுத் தெரு அர்ச் அந்தோனியார் மண்டபத்தில், ''ஈழத் தமிழரின் எதிர்காலம் ஐக்கியமா? சுயாட்சியா? என்ற விடயத்தைக் கொண்ட கருத்தரங்கம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

தமிழ் தேசிய கீதத்துடன் தலைவர் கூட்டத்தை தொடக்கி வைத்தார். சுமார் இருபது இளைஞர்கள் கருத்தரங்கத்தில் கலந்து பேசினார்கள். பலர் சுயாட்சிக்கு சாதகமாகவே பேசினார்கள்; சிலர் ஆத்திரத்துடனும் கோபாவேசத்துடனும் சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் தமிழர்களுக்கு செய்துவரும் இன்னல்களை எடுத்து பேசினார்கள். பெரும் காரசாரமாக காண்பவர்களுக்கு தீவிர மொழிப்பற்றை ஊட்டும் வகையில் தமிழ் இளைஞர்கள் முழங்கினார்கள்.

அத்தோடு தமிழர் கூட்டணி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு சங்கம் ஆதரவு அளிக்கவிருக்கும் தீர்மானத்தை முழு மனதுடன் இளைஞர்கள் ஏற்றுக்கொண்டனர். அத்தோடு தமிழர் கூட்டணி பிரச்சாரங்களை கொழும்பில் நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக தமிழ் தேசிய கீதத்துடன் நிறைவு பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில, சிங்களத் திணிப்பு யாழ்ப்பாணத்தில்! அன்னை தமிழுக்கு குழிபறிப்பு உமது ஆதிக்கத்தில்!

நடைமுறைத் தமிழியக்கத் தலைவர் திரு. க. இளையதம்பி யாழ் அரசாங்க அதிபருக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்க நிர்வாகத்தில் தமிழ் ஒழிக்கப்படுவது பற்றி விளக்கமான மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார். அதை அப்படியே இங்கு தருகிறோம். தமிழ்ப்பகுதியில் தமிழுக்கு இந்த அரசு உரிமை வழங்கி விட்டதாக கொக்கரிக்கும் ஆளுங்கட்சி அடிவருடிகள் இதற்கு என்ன கூறப்போகிறார்கள்?

## தமிழ் மக்களின் உணர்ச்சியை மதிப்பீர்! தமிழ்மொழிக்கு இடமளிப்பீர் நிர்வாகத்தில்!

### அரசாங்க அதிபருக்கு தமிழியக்கம் கடிதம்!

"யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் உள்ள பல கிளை அலுவலகங்களும்; மற்றும் தங்கள் ஆணைக்குட்பட்ட பல அரசாங்க அலுவலகங்களிலும் நாளாந்த அலுவல்கள் ஆங்கிலத்திலேயே நடப்பதாக பல சங்கங்களும், தனி நபர்களும் எமது இயக்கத்திற்கு முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

"நாம் அரசியல் சார்பற்ற நடைமுறையில் தாய் மொழியாம் தமிழை பாவனையில் செயற்படுத்துவதற்காக இயங்கும் ஓர் இயக்கத்தின் பிரதிநிதிகள் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன்.

"நடைமுறையிலுள்ள மொழிச் சட்டங்களிலோ, இலங்கை குடியரசு அரசியலமைப்பிலோ ஆங்கில மொழிக்கு எந்தவொரு அந்தஸ்தும் வழங்கப்பட்டிராமையினை சுண்டு நினைவூட்ட விரும்புகிறேன். சிங்கள மக்களுடன் சிங்களத்திலும் தமிழ்பேசும் மக்களுடன் தமிழிலும் தொடர்பு கொள்ளுதலே இவ்வரசாங்கத்தின் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கையாகும். எனினும் தங்களின் கீழ் கடமையாற்றும் அரசாங்க அதிகாரிகள் தமது சுயநல நன்மைக்காகவும் அரசாங்கத்தின்பால் தமிழர் கொண்டுள்ள அற்பசொற்ப நம்பிக்கைக்கும், நல்லெண்ணத்திற்கும் வேட்டு வைக்கவும், சட்டரீதியான அந்தஸ்து எதுவுமற்ற ஆங்கிலத்திலேயே தமது நாளாந்த கடமைகளைச் செயற்படுத்தி மக்களுடன் தொடர்பு கொள்கின்றனர்.

"இஃது மக்களுக்கு அரசாங்கத்தின்பால் வெறுப்பை அதிகரிக்குமேயன்றி தணிக்காது. தமிழில் கடமையாற்ற விரும்பும் பல சிற்றூழியர்க்கும், எழுதுவினைஞர்கட்கும் உயர் அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர். தமிழில் கடமை புரிவதை தமது அந்தஸ்துக்கும், மதிப்பிற்கும் இழுக்காக கருதுகிறார்கள். அந்நியமொழியில் கடிதங்களையும், பிறசாதனங்களையும் பெற்ற சாதாரண ஏழைத்தொழிலாளியின், விவசாயியின் இன்னல்களை மனக்கொந்தளிப்பை புரிகின்றனர் இல்லை.

● தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் விடையிறுக்கப் படுகின்றது. தமிழில் அச்சிடப்பட்ட அல்லது ரேணியோ பண்ணப்பட்ட பத்திரங்கள் கிடைப்பதில்லை. சாதனை வைப்பாளர் தமிழ்ப் பத்திரங்களை திறைசேரியிலிருந்து எழுதிப்பெறுவதில்லை. சிறுப்பர் கிளையும், பிறப்பு, இறப்பு பதிவுக்கிளையும், வருமானக்கிளையும் மற்றும் சில கிளைகளும் ஆங்கிலத்திலேயே பற்றுச் சீட்டுக்களை வழங்குகின்றன. வாகன வருமான அனுமதிப்பத்திரம், வெடிமருந்து வருமானப் பத்திரம், வியாபார நிலையப்பதிவென்பன ஆங்கிலத்திலேயே வழங்கப்படுகின்றன.

● ஒய்வூதியக் கிளை முற்றும் ஆங்கிலத்திலேயே மக்களுடன் தொடர்புகொள்கிறது. உணவுக் கட்டுப்பாட்டுக்கிளையும் முற்றும் ஆங்கிலத்திலேயே செயற்படுகிறது. பல வர்த்தகர்கள் விலைப்பட்டியல், முறைப்பாடுகள் போன்றவற்றை தமிழில் பெற முடியாதிருக்கின்றனர். கூப்பன் கிளை திரும்பிக்கொடுத்தால் அதற்கான அனுமதிப் பத்திரம் ஆங்கிலத்திலேயே கிடைக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களும் சமாஜங்களும் தம்முடன் இக்கிளை ஆங்கிலத்தில் தொடர்புகொள்வது குறித்து முறைப்பாடு தெரிவித்த வண்ணம் இருக்கின்றன. முக்கியமாக வாராந்த அரிசி, மா விநியோகக் கட்டளைகள் ஆங்கிலத்தில் எழுதப்படுவதால் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்றே புரியாது திண்டாடுகிறார்கள். அரிசி ஆலைக் கட்டளைகளும் மற்றும் காசுவவுச்சர்களும் ஆங்கிலத்தில் எழுதப்படுவதால் தமக்கு பெரும் குழப்பம் ஏற்படுவதாக ஆலை உரிமையாளர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர் தமது முறைப்பாடுகளை ஆங்கிலத்திலேயே பதிவு செய்து ஆங்கிலத்திலேயே வழக்கும் தாக்கல் செய்கின்றனர். மாவட்ட பதிவாளர் கிளை, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை ஆங்கிலத்திலேயே வழங்கி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது.

● குழுக்கூட்டங்களின் அறிக்கைகள் விண்ணப்பங்கள் போன்றவையும் ஆங்கிலத்திலே இருப்பதால் தாம் படும் இடர்கள் இன்னல்கள் குறித்து பலர் தமது மனத் தாங்கலைத் தெரிவித்துள்ளார்கள்.

● அரசாங்க செயலகத்தின் பல கிளைகளில் முத்திரைகள் இன்னமும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. புதிதாக செய்யப்படும் ரப்பர் முத்திரைகளில் தமிழைக் காணோம்.

● அரசகரும மொழி ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு புறம்பாக காசோலைகள் தனிச் சிங்களத்தில் வழங்கப்படுகின்றன. இவற்றை தமிழர்க்கு ஏன் தமிழில் வழங்கமுடியாது? சுற்றறிக்கையை மீறி அலுவல் பார்ப்போர் மீது ஏன் நடவடிக்கை எடுக்க இயலாதிருக்கிறது?

அரசகரும மொழியில் தேர்ச்சியற்றோரினதும் விதிவிலக்களிக்கப்பட்டோரினதும், சிற்றூழியரினதும் நலன் கருதி இவர்களுடன் கொள்ளும் தொடர்புகளையும் தமிழ்மொழியில் புரிதல் சாலச் சிறந்த செயலாகும்.

தமிழ் தட்டச்சுகள் இருப்பினும் தமிழ் தட்டெழுத்தாளர்களை நியமனம்செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கும் மொழிபெயர்க்கின்றனரேயன்றி, சிங்களத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து சிங்களத்திற்கும் மொழிபெயர்ப்புகளை செய்கின்றனரில்லை. இஃது ஏன்? எவர் நன்மைக்காக ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்?

திறைசேரி சுற்றறிக்கை இல. 760 தினை நடைமுறைப்படுத்த இயலாமைக்கு காரணம் யாதோ?

அரசாங்க அதிபர் அவர்களே! நீங்கள் சிங்களத்தில் புலமைவாய்ந்தவர் என்பதை நாடறியும், தமிழையும் நன்கு அறிந்துள்ளீர்கள். தங்கள் பேச்சுக்களை தமிழ் மக்கள் பாராட்டியுள்ளனர். இந்நிலையில் தமிழ்பேசும் மக்களின் மன உலைச்சலையும் அறிந்திருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

எனவே இது முதற்கொண்டாகுதல் தாய்மொழியாம் தமிழிலும் உத்தியோக அலுவல்களை புரியும் வண்ணமும், தமிழ் மக்களுடன் தமிழ் மொழியிலேயே சகலவித உத்தியோக அலுவல்களையும் நடாத்தும்படியும், உடனடியாக நிருவாக நடவடிக்கை எடுக்கும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

## சிறுபான்மைத் தமிழருக்குக் காணி வழங்குக!

"இந்த நாட்டிலே எத்தனையோ மக்கள் இருக்க இடமில்லாமல் அரசாங்கத்திடம் காணி கேட்டிருக்கின்றார்கள்; கேட்டுக்கொண்டும் இருக்கிறார்கள்.

உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் குடியேற்றத் திட்டத்தின் கீழ் ஐந்நூறு பேருக்குக் காணிகள் வழங்கப்படும் என்று அண்மையில் விளம்பரம் செய்த பொழுது பதினையாயிரம் பேர் விண்ணப்பம் செய்தார்கள். குடியேற்றத் திட்டத்தின் கீழ் அவர்களைக் குடியேற்றுவதாயிருந்தால் ஒருவருக்கு ஆகக் குறைந்தது 2,500, ரூபா செலவழிக்க வேண்டும். அரசாங்கத்திடம் அவ்வளவு பணம் இல்லாதபடியால் காணி கேட்கும் எல்லோருக்கும் அரசாங்கக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் காணி வழங்க முடியாது.

இன்னும் எத்தனையோ மக்கள் மற்றவர்களின் காணிகளில் குடியிருக்கின்றார்கள். உதாரணமாக, வட பகுதியிலே சிறுபான்மைத் தமிழ் மக்கள் — தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள்— காணி உள்ள மற்றவர்களின் காணிகளில் பல வருடங்களாகவே, நூற்றுக்கணக்கான வருடங்களாகக் குடியிருக்கிறார்கள்.

ஆனால் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் காணிச் சொந்தக்காரர்கள் அவ்வித காணிகளில் குடியிருந்தவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து எத்தனையோ பேரை வெளியேற்றியிருக்கின்றார்கள். சட்டப்படி அவர்களுக்குக் காணி சொந்தம். அதில் குடியிருந்தவர்கள் அவர்களது உத்தரவின் மீது குடியிருந்தபடியால் நீதிமன்றங்களில் தங்கள் உரிமைக்காகப் போராட முடியாது. இந்நிலையில் அரசாங்கம் குறுக்கிட்டு ஒருவர் பத்து வருடங்களுக்கு மேல் அந்தக் காணிகளில் குடியிருந்துவிட்டால் அவருக்கு அந்தக் காணிகளைக் கொடுக்கச் செய்வது நல்லதாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் எத்தனையோ தாழ்த்தப்பட்ட மக்கள் சிறுபான்மைத் தமிழர்கள் —உயர்சாதியினர் என்று சொல்லப்படும் மக்களின் காணிகளில் குடியிருக்கின்றார்கள். அவர்கள் அவற்றிலிருந்து வெளியாக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு நிலையிலே ஐம்பது ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை அரசாங்கம் எடுக்கும் பொழுது அப்படிப்பட்ட காணிகளில் அவர்களைக் குடியிருத்துவது மிகவும் அவசியமாக இருக்கும். அந்தக்காணிகளை விலைக்கு வாங்கும்படி அவர்களிடம் கேட்டால் அவர்களிடம் பொருள் வசதி இல்லை. எனவே, அரசாங்கம் ஒரு திருத்தம் செய்யும் பொழுது அவசியம் ஏற்படும் பட்சத்தில் பணம் பெறாமல் அவர்களைக் குடியேற்றுவதாயிருந்தால் மிகவும் நன்மையாக இருக்கும்."

— அரச. பரவையில் உடுப்பிட்டி பா. உ...

யாழ். வைத்திய சபைக் கூட்டத்தில்

## ஆங்கிலம் புரியாவிட்டால் வெளியேறுங்கள் அடிவருடிகளின் ஆணவப் பேச்சு!

### ஈன்ற தாய்க்குத் துயிலுரிகிறது ஈனப் பிறவி தமிழ்த் தாயின் புதல்வனுக்கு மட்டும் தடை ஏன்?

தமிழினத்தின் தலைநகராம் யாழ் நகரில் தன்னை ஈன்றெடுத்த தமிழ்த் தாய்க்குத் துகிலுரிகிறது ஓர் ஈனப் பிறவி.

அன்னை மொழியாம் தமிழ் மொழியை அரியணை ஏற்றுவதற்காக ஆட்சியாளருடன் போர் தொடுத்து நிற்கும் நம் அருந்தலைவர்களின் போர்க்குரல் தானும் இக் காக்கை வன்னியன் செவிகளில் கேட்கவில்லையா?

அண்மையில் யாழ் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் நடைபெற்ற ஓர் வைத்திய சங்கக் கூட்டத்தில் எழுந்து நின்றது ஓர் எட்டப்பன் பரம்பரை. திடீரென முழங்கியது ஆங்கிலத்தில். சீறி எழுந்தது தன்மானமிக்க ஓர் தமிழன் குரல். தாய் மொழியாம் தமிழ் மொழியில் உரையாற்றுங்கள் என்று பணிவோடு கேட்டது அப்பைந் தமிழ் குரல்.

ஆனாலும் பாதபூசை செய்யும் அப்பச்சைத் துரோகி பணிய மறுத்தது. அதிகார மிடுக்கால், ஆணவத் திமிரால்! ஆங்கிலம் புரியாவிட்டால் வெளியேறுங்கள் என வாய் கூசாது வாய்விட்டுக் கூறியது.

ஆங்கிலமோகத்தால் ஆணவம் பிறந்ததா? ஈனப் பிறவியே உன்னை ஈன்றெடுத்த அன்னைக்குக் கல்லறை கட்டினாயா? அந்தக் கூட்டத்தில் உனது பேச்சைப் புரிந்து கொண்ட அங்கத்தவர் தொகையை விரல் விட்டுத் தானும் உன்னால் எண்ண முடியுமா? இதைத் தானும் புரிந்து கொள்ளும் ஆற்றல் உன்னிடம் இல்லாமல் போய் விட்டதே.

சித்த மருத்துவத்தின் வித்தகனே! பணிவோடு கேட்கிறோம் பைந்தமிழைக் கொல்லாதீர். தன்மானம் மிக்க தமிழன் பரம்பரைக்கு அவமானம் தேடாதீர் [illegible] விலகுங்கள். து[illegible] செய்யாதீர்கள். சிந்தித்துச் செயல்படுங்கள். இல்லையேல் உங்கள் முகமூடி கிழிக்கவும் தமிழ் விளம்பி தயங்க மாட்டான்.

வைத்திய பூபதிகள் கூடிய இக்கூட்டத்தில் ஓர் அங்கத்தவருக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டது ஏன்? தமிழ்த் தாயின் வயிற்றிலே பிறந்தது குற்றமா? தமிழிலே கோலோச்சுங்கள் என முழங்கியது குற்றமா? சபையிலே புதுமையைப் புகுத்தி சபைக்குப் புத்துயிர் அளிக்க முற்பட்டது குற்றமா? கொடி பிடிக்கும் கூட்டமே உனக்குக் கரம் கொடுக்கவில்லை என்பது குற்றமா? சீரழிந்து செல்லும் சித்த வைத்தியத்திற்குப் புது மெருகூச முற்பட்டதுதான் குற்றமா? எது குற்றம். வைத்திய உலகமே கண்ணீர் வடிக்கும் இச்செயலுக்கு ஆறுதல் அளிப்பவர் யாரோ?

— "தமிழ் விளம்பி" யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்! நிலம் இருந்தால்தான் தமிழினம் வாழலாம்!

தமிழ் வாழ தமிழன் வாழ வேண்டும். தமிழன் வாழ தமிழன் தாயகம் வாழ வேண்டும். தமிழும் தமிழனும் தமிழன் தாயகமும் நிலைத்து வாழ இவை அனைத்தையும் பேணிக்காக்கும் ஒரு அரசியல் அமைப்பு உருவாகியே ஆகவேண்டும். இணைப்பரசில் ஒத்த உரிமையுடன் இனித்து வாழலாம் இன்பம் காணலாம் வாரீர் என்று ஏறக்குறைய இருபத்திரண்டு ஆண்டுகளாக ஏதுக்கள் பல கொண்டு எடுத்து இயம்பிய எம் வேண்டுகோள் முற்றுகப் புறக்கணிக்கப்பட்ட இன்றைய நிலையில் தனித்து வாழ — தனியரசை நாட நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

## சுவர் வேண்டும் சித்திரம் வரைய

தமிழன் தமிழனாக தனது தனித்தன்மையைப் பேணி அரசு காண்பதற்கு முதற்படியாக அவனின் மரபு வழித் தாயகத்தில் Traditional Homeland) அரசாங்கத்தினாலும் அரசாங்க சார்புடைய நிறுவனங்களிலாலும் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சுவர் இருந்தாற்தான் சித்திரம் வரையலாம் என்ற தொன்மை மொழிக்கமைய யாம் விரும்பிய அரசை உருவாக்க நிலப்பாதுகாப்பே அடித்தளமாக அமைய வேண்டும்.

## மூக்கேஜி மொழிந்தவை

இப்பேருண்மையை டாக்டர் இராதா குமுட் மூக்கேஜி Radha Kummud Mookerjee) தனது இந்து நாகரிகம் (Hindu Civilization) என்ற அரும்பெரும் நூலில் பின்வருமாறு அழுத்தம் திருத்தமாக மொழிகிறார்.

''அரசியல் வாழ்விலும் நாகரிகத்திலும் முன்னேற விரும்பும் எந்த இனத்தவர்க்கும் முதலாவதாகத் தேவைப்படுவது தனது தாயகம் எனக் கூறிப் பணிபுரிய வரையறை செய்யப்பட்ட நிலையான நிலப்பரப்பினை வைத்திருப்பதேயாகும். தனது தாயகம் என்று கூறிக்கொள்வதற்கு ஓர் நிலப்பரப்பு இல்லாத நிலையில் திடமற்ற நிலபேறு பெறாத அமைதியற்ற நிலையில் எதிர்காலத்தைப்பற்றி தெளிவான சிந்தனையற்ற நிலையில் வாழ்பவர்கள் தம் பண்பாடும் நாகரிகமும் எழுச்சி பெறற்கேற்ற சூழ்நிலையைப் பெறுதவர்கள் ஆவர். நாகரிகத்தின் மிக்க கீழ்நிலையில் உள்ளோர்தான் நாடோடிகள் தமது தாயகத்தை கட்டி எழுப்புவதற்குரிய ஒற்றுமையில்லாததே யூதர்கள் தம் அரசியலில் உணர்ச்சி பெறுவதற்கு தடையாக இருந்திருக்க வேண்டும். எப்படி தனி ஒருவனுக்கு தன் உடலோ அதுபோல் ஒரு தேசிய இனத்திற்கு அதன் நாடாகும். தன்னை உணர்த்த இது இன்றியமையாததாகும்.''

## திருமூலர் மொழிந்தவை

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'' என்று திருமூலர் ஞானநிலையில் கூறிய கருத்து நானில வாழ்விற்கும் ஏற்ற நலமிக்க கூற்றாகும். அது நிற்க யூதர்களின் குறை பற்றி 1936ல் இப்பேராசிரியர் வரைந்த கருத்திற்கு மாற்றுமருந்து காண்பது போல் 1948ல் 12 ஆண்டுகள் கழிந்த நிலையில் ஒன்றுபட்ட யூதர்கள் இசுரவேல் நாட்டை உருவாக்கி உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளனர்.

## ஜின்னாவின் அறிவுரை

ஒரு இனத்தின் வாழ்விற்கு நிலத்தின் முக்கியத்துவம் எத்தன்மையது என்பதை பாக்கித்தானை உருவாக்கிய முகமது அலி ஜின்னாவும் பின்வருமாறு ஆணித்தரமாக அறைந்துள்ளார். 1941ல் முசிலிம் மாணவர்களுக்கு முழங்கிய கருத்து இதோ:-

''நூற்றுக்கணக்கான மேடைகளில் நாம் சிறுபான்மையினர் அல்லர் என முழங்கியது உண்மையே. நாம் ஒரு தேசிய இனம். உண்மைதான். ஒரு தேசிய இனம் தனக்கொரு நிலப்பரப்பைவைத்திருக்க வேண்டும். வெறுமனே நாம் ஒரு தேசிய இனம் என்று கூறுவதில் என்ன பொருள்? தேசிய இனம் அந்தரத்தில் வாழமுடியாது. நிலத்திற்தான் வாழ்கிறது. அந்நிலத்தையே ஆளவேண்டும். எல்லைப்பரப்புள்ள அரசும் வேண்டும். அதைத்தான் நீங்கள் பெறவிரும்புகிறீர்கள். இது ஒரு சிறிய பணியல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள். மொகலாய பேரரசு வீழ்ச்சியுற்ற பின் நீங்கள் பொறுப்பேற்றுள்ள மிகப்பெரிய பணி இதுதான்.''

## வன்னியரும் நாகநாதனும் இடித்துரைத்த பேருண்மைகள்

இவ்விதம் ஆழ்ந்த அரசியல் ஞானிகள் பொழிந்த கருத்துக்களுக்கு வழி கூறுவதுபோல் நிலப்பாதுகாப்பு பற்றி எம் மறைந்தும் மறையாத மாபெரும் தலைவன்— வாழ்விடத்தைக் காத்து வண்டமிழை வாழ்வித்த வன்னியசிங்கம் அவர்கள் பின்வருமாறு தனக்கே உரிய தனி முறையில் எமக்கு எடுத்து இயம்பியுள்ளார்.

''தம்பி யாம் எதை இழந்தாலும் மீண்டும் பெறலாம். எம்மொழியைக்கூட யாம் இழந்தாலும் எம் வழித் தோன்றல்கள் அதனை மீட்கக்கூடும். ஆனால் எம் வாழ்வகத்தை யாம் இழப்போமாயின் எம் இனத்தின் வாழ்வே அழிந்துவிடும். தமக்கென்று ஒரு பகுதியற்று நாடெங்கணும் பரவியிருந்த பரங்கியர் நாடே விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. எமக்கென்று ஒரு நாடு—எமக்கென்று ஒரு பகுதி இல்லாவிடின் பறங்கியரினும் பாழான நிலைக்கு படுகுழியில் நாம் தள்ளப்படுவது உறுதி.

அதுமட்டுமல்ல 1958 இனக்கலவரத்தின் போது எமக்கென்று ஒரு தாயகம் இருந்ததினால் அங்கே தமிழ்ப்பகுதிகளுக்கு வந்து தஞ்சம் புகுந்தோம். எமக்கென்று ஒரு பிரதேசம் இல்லாவிடின் இந்து சமுத்திரத்தில் அல்லவா நாம் சங்கமம் ஆகியிருப்போம்'' என்று எவரும் மறுத்துரைக்க முடியாத உண்மையை உள்ளம் உருக உணர்த்தியதை இன்று எண்ணிப் பார்க்கின்றபோதுகூட கண்களில் நீர் பெருகுகிறது.

ஏறக்குறைய இதே கருத்தை தனக்கே உரிய வீறு நடையில் மறைந்த மாவீரன்

பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்க் குரல்களின் எண்ணிக்கை அங்கு குறைக்கப்பட அவர்களின் கூற்றிற்கும் மதிப்பு குறைக்கப்படுகிறது. இது நாள்தோறும் காணும் கண்ணீர் வருவிக்கும் கவலை தரும் காட்சியாகும்.

## கமமும் கைத்தொழிலும் செய்ய நிலம்வேண்டும்

இவை மட்டுமல்ல யாம் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன எமது வழித்தோன்றல்கள் ஈழத்தின் தென்பகுதியில் அரசாங்க திணைக்களங்களை அலங்கரிக்கப்போவதில்லை. மாறாக எம் குழந்தைகளின் வருங்காலம் வேளாண்மையிலும் கைத்தொழிலுமே தங்கியிருக்கிறதென்ற கசப்பான உண்மையை நாம் மறக்க நினைத்தாலும் மறக்கமுடியாது. ஆகவே எம் வாழ்வு நிலை தழும்பாமல் இருக்க எம் நிலத்தை உயிர்கொடுத்தும் காப்பது எம் கடமையாகும். இல்லாவிடில் எம் குழந்தைகள் சிங்களச் செல்வந்தர் வீடுகளில் வேலையாட்களாக-ஆயாக்களாக காணும் வேத

வுடமைத் தத்துவத்தை தம்மையன்றி வேறுயாரும் அறியார் என்று தம்பட்டம் அடிப்போரும் தாம்தான் மாவோவின் வழித்தோன்றல்கள் என்று கொக்கரிப்போரும் மாகோ (மாவோ) கூறிய பின்வரும் கூற்றினை தம் உள்ளத்தில் ஆழத்தில் பதிப்பார்கள் என்று எதிர் பார்ப்போமாக. இதோ அவர் செப்பியவை—

''இன உரிமைகள் பறிக்கப்பட்டுள்ள மக்களை எதிர் நோக்கியுள்ள புரட்சிகரமான பணி உடனடியாக சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதல்ல — ஆனால் தன் விடுதலைக்காகப் போராடுவதேயாகும். சோசலிச அமைப்பை நடைமுறைக்குக் கொண்டுவரமுடியாமல் எம் நாடே களவாடப்பட்ட நிலையில் சோசலிசம் பற்றி ஆராய்வதே முடியாத செயலாகும்.''

## கிழக்கு பறிபோகிறது

சுருங்கக் கூறின் பட்டிப்பளை பாய்ந்தோடி பசுமையூட்டிய கிழக்கின் முக்கிய பகுதிகளைப் பறித்து கல்

# பறிபோகிறது தமிழர் தாயகம்!

## பார்த்திருப்பதோ பைந்தமிழ்க் குலம்?

டாக்டர் நாகநாதன் பின்வருமாறு நாடாளுமன்றத்தில் ஒருமுறை முழங்கினார்.

''இலங்கையில் காட்டு விலங்குகளையும் பறவைகளையும் பேணிக் காப்பதற்கு காட்டுப்பகுதிகள் நிலையாக ஒதுக்கப்படுகின்றன. ஆனால் காட்டு விலங்குகளிலும் பறவைகளிலும் கீழாக மதிக்கப்படும் இலங்கைத் தமிழரின் மரபுவழித் தாயகமோ திட்டமிட்டு அரசாங்கத்தினால் பறிக்கப்படுகின்றது. இதனால் தமிழர் இந்நாட்டில் தொடர்ந்து வாழ முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.''

## எம் குடியை அழிக்கும் குடியேற்றம்

எமது தாயகத்தில் எமக்கென்று ஒரு அரசு நிறுவுவது ஒரு புறமிருக்க இன்றைய சூழ்நிலையில் சிங்களக் குடியேற்றத்தினால் எமது தாயகத்திலேயே யாம் சிறுபான்மையினராக ஆக்கப்பட்டு எமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவமும்

னைமிக்க சூழ்நிலை உருவாகியே தீரும். ''அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார் அஃதறிவிலாதார்'' என்றும் ''அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது அஞ்சல்அறிவான்தொழில்'' என்ற வள்ளுவனின் மொழிகள் வெறும் வெற்றுரைகள் அல்ல. இன்றைய சூழ்நிலையில் எமக்கு வழிகாட்டும்

### ஈழவேந்தன்

பொருள் பொதிந்த பொன்னுரைகள் என்பதை நினைவுகொள்வோமாக.

## மாவோ மொழிந்த மாபெரும் சிந்தனை

இவ்விதம் இடித்து இடித்து நிலப் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி கூறினும் முற்போக்குவாதிகள் என்று தமக்குத்தாமே பட்டம் சூட்டியோரும் பொது

லோயா என்று பெயர்சூட்டிய வஞ்சம் நிறைந்த சிங்கள அரசு, மூதூரை, முற்றுகையிட்டு பழந்தமிழ்க் கிராமங்களாகிய குமரன் கடவையை 'கோபரங்கடவ' ஆக்கி வெண்டரசன்குளத்தை 'வெண்டரசகுளம்' ஆக்கி வரலாறு என்ற பெயரில் கட்டுக்கதைகளையும் வரையத் தொடங்கியுள்ளது.

அதுமட்டுமல்ல வடக்கின் எல்லையாம் வயல் செறிந்த வவுனியாவையும் பறித்து எம் எல்லையிலும் தொல்லையைத் தருகிறது அரசாங்கம். வடக்கையும் கிழக்கையும் இணைத்து இயற்கைத் துறைமுகத்தை தன்னுள் அடக்கி, எம் வாயிலும் மனத்திலும் மருவி நின்று அகலாத மாண்பினனாகிய எம் தாயினும் நல்ல தலைவனும்கோணேசன் குடிகொண்டிருக்கும் கோணமாமலையையும விழுங்கி தன் அடங்

(9-ம் பக்கம் பார்க்க)

# பகத்சிங்கும், குமரனும், வ. உ. சியும் ஈழத் தமிழர்களிடையே தோன்றட்டும்!

## விடுதலை காணும்வரை பயணம் தொடரட்டும்!

தமிழா! உன் பிற்காலசந்ததியை நட்டாற்றில் விட்டு விடாதே! நம் கல்லறை மீது கண்ணீர் வடிக்கும்படி விட்டுவிடாதே! உன் பழம்வீரம் மங்கி வருகிறதே தவிர மறைந்துவிடவில்லை. உனது பாதை வீரம் நிறைந்த வெற்றிப்பாதை. உன் தாய் குற்றுயிராய் இரத்த வெள்ளத்தில் கிடக்கிறாள். அவளை அநியாயமாகச் சாக விடாதே! ஓடு உன் தாயைக் காப்பாற்று! ஈழமெங்கும் தமிழ் இனஉணர்வு பொங்கி எழும்பினால் பிறநாட்டார் நம்மை அறிந்து கொள்ளச் செய்வதிலே கஷ்டம் அதிகம் இருக்காது!

நம் பழம் தமிழ் மக்கள் எப்படி ஏற்றம் பெற்று விளங்கினரோ, அதுபோல், இன்றும் முயற்சி செய்தால், தடைகளை நொருக்கினால், தன்னரசு அமைத்திடின் தரணி மெச்சும் வகையில் வாழலாம். முப்புறமும் கடல்—முத்தெடுக்கச் சென்றிடலாம். கானெல்லாம் [illegible] வைத்து அகழ்ந்திடுவோம், நிலந்தனை எடுத்திடுவோம். சுண்ணாம்புக் கற்கள் உண்டு, இர

சாயணச் சாலைகள் அமைத்திடலாம். சிமெந்து மூடைகளாய் ஏற்றிடுவோம் வெளிநாடு! சீனி செய்திடக் கற்பக தருக்கள் உண்டு. பஞ்சாலை அமைத்துத் துணி வகைகள் நெய்திடலாம். ஆழ் கிணறு வெட்டி விட்டால் நமக்கேன் தண்ணீர்ப் பஞ்சம், நாடு செழித்திடும் செந்தமிழ் நாட்டில் வளமாக வாழ்ந்திடலாம்.

இரத்த ஆறு ஓடவைத்து இலட்சியத்தை அடைய வேண்டும் என நாம்சொல்லவில்லை. அறமே நம் ஆயுதம். ஆனால் நம் அமைதியான, ஆயுதம் ஏந்தாப் போர் தோல்வி அடையுமானால்? பொறுமை பொங்கி எழுமானால்?

### பார்த்திபன்

சமஷ்டி கேட்டோம், கனவு காண்பதாகச் சொன்னார்களே தவிர, அந்தக் கனவு கூடாதது என்று சொல்லவில்லை. கிடைக்காது என்றார்கள் தனியரசு

பெற்றால் நிலைக்காது என்றார்கள். ஆனால் எப்படி நடந்தால் கிடைக்கும், நிலைத்திருப்பதற்கு எது செய்ய வேண்டும் எனச் சொல்லவில்லை, சமஷ்டி கேட்பது பிரிவினை என்கிறார்கள் அரசியல் அறிவற்ற முட்டாள்கள். இப்படிப்பட்ட அரசியல் வாதிகளால்தான் இன்று நம்நாடு ஆளப்படுகிறது.

எப்போது உரிமை கிடைக்கும் என்று கேட்காதீர்கள். நம் உரிமையைப்பெற நான் என்ன செய்ய வேண்டும் என்று கேளுங்கள். பணம் உள்ளவர்கள் பணம்கொடுங்கள். பேசக் கூடியவர்களும் எழுதக் கூடியவர்களும் அவற்றால் உணர்ச்சியை ஏற்படுத்திப் பிரச்சாரம் செய்யுங்கள் இளைஞர்கள் தொண்டர்களாகச் சேருங்கள். மிகப் பெரும் போராட்டம் நம் தமிழ்த் தாயின் உரிமை காக்க ஆரம்பமாகியுள்ளது.

விடுதலை முழக்கமிட்டு மடிந்தவர்கள் போக இருப்பவர்கள் விடுதலை விடுதலை என முழக்கமிட வேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கிளை செயலாளர் உப தலைவரானார்

நயினாதீவு, கிராமசபையின் உபதலைவராக திரு. அ. நல்லையா ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். இவர் 5, ஏ. வட்டார உறுப்பினராக மேற்படி கிராம சபையில் 20 ஆண்டுகாலமாக தொடர்ந்து இருந்து வருகிறார். 5முறை உபதலைவராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் தமிழ் அரசுக்கட்சியின் நயினாதீவு கிளை செயலாளராகவும் நயினாதீவு தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளராகவும் ஏனைய பொதுஸ்தாபனங்களின் நிர்வாக உறுப்பினராகவும் கடமையாற்றி வருகிறார். பொதுச் சேவையில் மிக ஆற்றல் உடையவர்.

---

## தமிழுக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் பிறப்புச்சாட்சிப் பத்திரங்களை தமிழில் பதிவதற்கு தமிழ் பிரதேசத்திலும்சரி, தமிழ்ப்பிரதேசத்துக்குவெளியிலும்சரிஉரிமையளிக்கப்படவில்லை. தமிழர்களின் பிறப்பு சாட்சிப் பத்திரங்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே பதியப்படுகின்றன.

— அடையாள அட்டைக்கு தமிழில் விண்ணப்பித்தவர்களுக்கு தமிழில் அடையாள அட்டை வழங்குவதே நியாயம். ஆனால், தமிழர்கள் உட்பட சகலருக்கும் தனிச் சிங்களத்தில் அடையாள அட்டை வழங்க முயற்சி நடக்கிறது.

மேற்கண்ட இந்த அநீதிகளையெல்லாம் காவலூரர் பா. உ. பண்டிதர் கா.பொ. இரத்தினம் அரசின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

# ‘அமைதிவழியை நாம் நாடுவதை அடிமைத்தனம் என்று எண்ணாதீர்!’

## ஆட்சியாளருக்கு நாவலர் எச்சரிக்கை!

## கடையடைப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்கு சமர்ப்பித்து இரண்டு மாதங்களாகியும் அரசாங்கம் அதையொட்டி எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கத் தவறிவிட்டது. இதை தமிழர்கூட்டணி நடவடிக்கைக்குழுகவனித்து திட்டமிட்டபடி செப்டம்பர் 30ம் திகதிக்கு முன்பு நிலைமையில் மாற்றம் ஏற்படாவிட்டால் செப்டம்பர் 30ம் திகதி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய ஐந்து மாவட்டங்களின் தலைநகரங்களிலும் பகிரங்கக் கூட்டங்கள் நடத்தி அடுத்த நடவடிக்கைகளை மக்களுக்கு அறிவிக்கும்.

கூட்டணியின் முதல் நடவடிக்கையாக மகாத்மா காந்தியின் பிறந்த தினமான அக்டோபர் 2ம் திகதியை இலங்கைவாழ் தமிழினம் பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்கும்.

அத்தினத்தில் வேலைகளுக்கு செல்லாது தொழில் நிலையங்கள், பாடசாலைகள் ஆகியவற்றை மூடுவது.

அன்று பிற்பகல் 5-30 மணிக்கு ஒவ்வொரு தொகுதியிலும் தமிழினம் தனது சுய நிர்ணய உரிமையை நிலை நாட்டத் தீர்மானித்துவிட்டதன் அறிகுறியாக தமிழர் கூட்டணியின் கொடியை தங்கள் தொகுதியின் மத்திய இடத்தில் கூடி பறக்கவிடவேண்டும்.

தமிழினத்தின் தேசிய கீதத்தை அங்கு இசைக்கவேண்டும்.

குழுவின் அடுத்த கூட்டம் செப். 17ம் திகதி செங்கலடியிலுள்ள கல்குடா எம். பி. திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் இல்லத்தில் நடைபெறும். அங்கு தொடர்ந்து எடுக்கவேண்டிய திட்டங்கள் பூர்த்தியாக்கப்படும்.

“தமிழ்பேசும்மக்கள்இன்றும் அமைதியையே விரும்புகிறார்கள். இந்நாட்டை இரத்தக்களரியாக்க அவர்கள் விரும்பவில்லை. இந்நாட்டில் வாழும் பெரும்பான்மையினத்தவர்கள் எதை அநுபவிக்கின்றார்களோ அதையே விரும்புகின்றார்கள். ஏற்கனவே அநுபவித்த உரிமையைத்தான் திரும்பக் கேட்கின்றார்கள். இது எவ்வகையிலும் பாதகமாக அமையமாட்டாது. அமைதியை, அகிம்சையை, சகோதரத்துவத்தை விரும்பி அதற்காக உழைத்து வருகின்ற தமிழினத்தைப் பார்த்து ஒரு அடிமை இனமென்று பெரும்பான்மை இனத்தவர்கள் கருதினால் நிச்சயம் நாம் அந்நிலைமையை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.”

இவ்வாறு — நாவலர் தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் அண்மையில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் பிரசாரக் கூட்டமொன்றில் உரைநிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

தமிழினத்தை ஆளப்படுமினமாகவே இன்று கருதி அரசு செயல்படுகின்றது. தமிழினம் ஆளப்படுமினமல்ல... அது ஒரு காலத்தில் தனியரசு நடத்தியிருக்கின்றது. இன்றோ அந்த நிலைமாறி சிறுபான்மையாக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையினை வைத்துக்கொண்டு அவர்களை அடிமைப்படுத்தி அழித்தொழித்துவிடலாமென்று தப்புக் கணக்குப் போட்டு சதிவேலை நடக்கின்றது.

தமிழினத்தை வேரோடு பிடுங்கி எறியவே காலத்திற்குக் காலம் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன... முதலில் குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து 8 பிரதிநிதிகளை மீண்டும் வராமல் செய்தார்கள். அநீதிநிறைந்த அந்தச்சட்டம் அன்று கொண்டுவரப்படாவிடில் இன்று மலையகத்திலிருந்து 12 பிரதிநிதிகளுக்கு மேல் தேசிய சபையில் இருந்திருப்பார்கள். சிறுபான்மையினத்தவரின் உரிமைகளைப் பாதுகாக்கும் 29வது சரத்தையும் இன்று புதிய அரசியல் திட்டத்தில் இல்லாமல் செய்துவிட்டார்கள்.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் மறைந்து இந்நாடு சுதந்திரம் பெற்றது. இந்நாட்டில் வாழ்கின்ற மக்கள் யாவரும் சுதந்திர புருஷர்களாகவாழவேண்டியவர்கள். ஆனால் அவர்களது சுதந்திர உரிமைகளை சிங்களவர் பறித்தெடுத்துவிட்டு தங்களது சிங்கள ஏகாதிபத்தியத்தை திணிக்கப்பார்க்கின்றார்கள்.

### சிங்களத்திடம் சரணாகதி!

அன்று குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது அது தொழிலாளர் வர்க்கத்தைப் புதைகுழியில் தள்ளக்கூடிய சட்டம்... ஒரு உண்மையான சோசலிச அரசாங்கம் இத்தகைய ஒரு படுபாதகமான சட்டத்தை ஒருநாளுக்கு மேல் வைத்திருக்காது என்று முழக்கம் புரிந்த என். எம். மும் அவரது சகாக்களும் இன்று எங்கே? அதிகாரத்தைப் பிடிக்க மனச்சாட்சியை விற்றார். சிங்களத்திடமும் அம்மாவிடமும் தஞ்சம் புகுந்தார். சரணாகதியடைந்தார். நாம் கேட்பது ஒன்றும் புதியது அல்ல. அன்று அவர்கள் கேட்டு நாள் கணக்கில் வாதாடிய உரிமையினைத்தான் நாம் இன்று கேட்கின்றோம். இதை அவர்கள் மறுத்தால் ‘கன்சாட்’ என்ற பதிவேட்டை புரட்டிப் பார்க்கட்டும்.

## தலைவர் தொண்டமான் வாழ்க!



மலையகத்தின் பெருந்தலைவர்களில் ஒருவரும் இ. தொ. கா. தலைவருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான், ஆகஸ்ட் 30ம் நாள் தமது 60வது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

தலைவரின் பிறந்த நாளையொட்டி இ. தொ. காங்கிரசின் ஏடான ‘காங்கிரஸ்’ அழகான வண்ண மலர் ஒன்றை வெளியிட்டுச் சிறப்பித்தது. 34 பக்கங்களைக் கொண்ட இந்த மலர் பக்கத்துக்குப் பக்கம் தலைவர் தொண்டமானின் சேவைகளையும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் கொண்ட கட்டுரைகளையும் கவிதைகளையும் தாங்கி சிறப்புற வெளிவந்துள்ளது.

தலைவர் தொண்டமான் நீடூழி வாழ்க என நாமும் இதயபூர்வமாக வாழ்த்துகிறோம்.

— ஆர்.

# பகத்சிங்கும், குமரனும், வ. உ. சியும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை கிடைக்கும்வரை விடுதலை கிடைக்கும் வரை இது ஓயக் கூடாது. நமது இலட்சியப் பயணத்துக்கு இடையூறு விளைவிக்கும் முறையில் சிலர் நடந்து கொண்டாலும், இதோ நான் இருக்கிறேன். துணை நிற்க, பயணத்தைத் தொடர்ந்து நடத்த என்று எவன் தெரிவிக்கிறானோ அவனே மறத்தமிழன்.

தலைகனத்தோர் ஆட்சிக்கு முடிவுவைத்து தனி அரசு அமைத்திட பொங்கி எழுவோம். ஏளனம் செய்த தமிழ்த் துரோகிகளை உதைத்துத் தள்ளிவிட்டு முன்னேறுவோம். நம் இயக்கத்தை அழிக்க முயன்றோர் பலர். ஆனால் அது அழியவில்லை கிளைவிட்டு பரவுகிறது. காரணம் அது புனிதமான இயக்கம். பகைமுடிப்போம், பழிதுடைப்போம் அறவழி நின்று தனியரசமைப்போம். தடைகளைத் தகர்த்தெறிந்து அன்னை மொழியை அரியணையில் அமர்த்துவோம்.

நமது விடுதலை குறுகிய காலப்போராட்டத்தினால் கிடைத்துவிடும் என எதிர்பார்ப்பது தவறு. நீண்ட காலப்போராட்டம் இது!

சாதாரண காரியமல்ல விடுதலைபெறுவது, மிகவும் பயங்கரமானதும் பல கஷ்டங்களை ஏற்கவேண்டியதுமான பெரும் போராட்டம்! விடுதலைப்போராட்டத்துக்காக மற்ற நாடுகள் செய்த போராட்டங்களைப் பாருங்கள். இந்தியச் சுதந்திரப் போராட்டம், ஐரிஷ், கென்யா போன்ற நாடுகளில் நடந்தபோராட்டங்கள்தியாகங்கள் இவைகளை சிறிது பாருங்கள். ஏன் வங்காள தேசத்தைப் பாருங்கள். இரத்த ஆறு ஓடியதை மறந்தே இருக்க மாட்டீர்கள். ஆனால் தமிழ் மொழி விடுதலைக்கு நீங்கள் என்ன தியாகம் செய்தீர்கள்? எத்தனை உயிர்களைப் பறி கொடுத்தீர்கள்?

இன்றில்லாவிட்டால் நாளை தெருவில் தமிழ்பேசினால் கைது செய்யப்படும் நிலை ஏற்படலாம். நீ ஒரு தமிழரசு வாதியா எனக் கேட்டும் கைது செய்யப்படலாம். அப்படியான தடைச் சட்டம் கூட வந்துவிடலாம். தமிழா! இனியுமா உன் பொறுமை, ஒத்துழைப்பு பலன் தராது. வேண்டாம் ஒத்துழைப்பு! பொறுத்தது போதும் பொங்கி எழு. துப்பாக்கியை நீட்டினால் துவண்டு விடாதீர்கள். சுடு, என்று சொல்லி நிமிர்ந்து நில்லுங்கள்.

சமீபத்தில் யாழ்நகரில் தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தின் முன் தளபதி துப்பாக்கியை நீட்டிய பொலிசாருக்கு, [illegible] துணிவிருந்தால் சுடு [illegible] அந்த வீர வார்த்தையை முழங்குங்கள். அந்த முழக்கம் உலகெங்கும் ஒலிக்கச் செய்யவேண்டும்.

இந்திய விடுதலைக்காக தூக்கு மேடை ஏறிய பகவத்சிங், செக்கிழுத்த சிதம்பரனார், கொடி காத்த திருப்பூர் குமரன், இவர்களெல்லாம் தேவர்களா? இவர்களும், விடுதலைக்காக உயிர் தந்து சிறை சென்ற அனைவரும் மனிதர்களே. அவர்கள் போராடினார்கள். நீண்டகாலப் போராட்டத்தின் பின் சுதந்திரம் பெற்றார்கள். தன் சுகவாழ்வைத் துறந்து நாட்டுக்காக வாழ்வைத் தந்த காந்தி, மோதிலால் நேரு போன்றவர்கள் வாழ்வைப் பாருங்கள். இரத்தம் சிந்தி வெற்றி பெற்றது வங்கம். நாம் என்ன செய்தோம்? உயிரைக் கொடுக்கத்தயாரா? தயாரென்றால் புறப்படுங்கள்.

எமது இலட்சியத்திற்காகப்போராடுகிற போது எங்களை அடித்து நொறுக்கி கீழே சாய்த்து விட்ட பிறகு —எங்கள் உயிர் பிரிந்த பிறகு வேண்டுமானால் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளிடம் பேரம் பேசிக்கொள்ளட்டும் — குறுகிய மனம் படைத்து நம்மிடையே உள்ள துரோகிகள்! அதுவரை [illegible]

## மீறிவிட்டது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொட்டு கூட நிலம் கிடைக்காமல் கதவு மூடப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களும் சரி, பதிவுசெய்யப்படாதவர்களும் சரி— இந்திய வம்சாவழியினரான மலைநாட்டுத் தமிழருக்கு நிலம் தரமாட்டோம்—சிங்களவருக்கு மட்டுமே அங்குள்ள நிலத்தைப் பகிர்ந்தளிப்போம் என்று ஆட்சியாளர்கள் பகிரங்கமாகவே தேசிய பேரவையில் வெட்ட வெளிச்சமாக — அதுவும் பச்சை வகுப்பு வாத அடிப்படையில் எடுத்துக்கூறிவிட்டார்கள்.

இந்து மசோதா விவாதிக்கப்பட்டபோது இந்தியத் துவேஷம் வெகு தாராளமாகக்கொட்டப்பட்டிருக்கிறது.

• இந்நிலையில், சிறிமா—சாத்திரி ஒப்பந்த விதிகளுக்கும் உணர்ச்சிக்கும் விரோதமாக. இலங்கை நடந்துகொண்டுள்ளதென்றும், தோட்டத்தொழிலாளர்களுக்கு நிலம் கொடுக்காமல் மறுப்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு முரண்பட்டதென்றும், இலங்கையே ஒப்பந்தத்தை தகர்த்தெறிந்து விட்டதென்றும் பொதுவாக அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்திய அரசு இதை எப்படி சந்திக்கப் போகிறதென்பதே அரசியல் வட்டாரங்களின் இன்றைய கேள்வியாகும்!

## உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் இன்று 86வது நாள்!

திருக்குறள்

மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றன. கடவுள் வாழ்த்துப் பகுதியில் உள்ள 10 குறள்களையும் ஒழுங்கு முறைப்படி சேர்த்துக் கொடுத்து, உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகம் ஒன்றை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக சித்த மருத்துவக் கண்காட்சி மதுரையில் 17, 18-4-71ல் நடைபெற்றபொழுது நாங்கள் இவ்விடமிருந்து அனுப்பிய மருந்துகளைப் பரிசோதித்து சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்ற மருந்துகள் என பாராட்டி "மருத்துவ மன்னன்" எனும் அணிமுறைப் பட்டமும் கிடைக்கப் பெற்றனர்.



வைத்தியராஜ் K. சிவசுப்பிரமணியம்
M. I. H. Ind. S. M P.

# சிவா ஜீவாமிருதம் A. D. SYRUP

பலவிருத்தி டானிக்

ஆண், பெண் இருபாலாருக்கும் கைகண்ட ஔஷதம். இரத்த சுத்திக்கும், இரத்த விருத்திக்கும் நரம்புத் தளர்ச்சி, முதுகு வலி, கைகால் நடுக்கம், பசி இன்மைக்கும் இன்றியமையாதது. பாண்டு, சோகைக்கும் வயது வித்தியாசமின்றிப் பாவிக்கலாம்.

புட்டி ஒன்றுக்கு
ரூ. 12-50

# சித்தர் கேசரி தைலம்

ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட கேசரி, பச்சை மூலிகைகளால் பக்குவமாய்த் தயாரிக்கப்பட்டு, பீனிசம், தலைவலி, கண் மங்கல், காது நோய்களை நீக்கி, மூளைக்குக் குளிர்ச்சியையும் இளநரை மயிர் அகற்றி, கருமை உண்டாக்கி, அடர்ந்து நீண்ட கூந்தலையும் வளர்க்கும் சித்தர் கேசரி.

புட்டி ரூ- 3-75
பெரியது ரூ- 7-00

# சுவர்ண சஞ்சீவி லேகியம்

மலச்சிக்கலுடனும் கடுப்பு இரத்தம் இவைகளுடனும் மலம் வெளியாகுதல், கிருமிகள் அதிகரித்து அரிப்பு, மூல முளைகள் எரிவு, வாய்வு, பித்த மயக்கம் வயிற்றுவலி, பசியின்மை, இடுப்பு வலி, ஆசனவாய்க் கடுப்பு இவைகளைக் குணமாக்கி சுகமாக மலசுத்தியாகும். காலையிலும், இரவிலும் ஆகாரத்துக்குப் பின் நெல்லிக்காய் பிரமாணம் சாப்பிட்டு பால் அல்லது தண்ணீர் சாப்பிடவும். பத்தியம் இல்லை. ஆண் — பெண் இருபாலாரும் சாப்பிடலாம்.

விலை ரூ. 5-00 பெரியது ரூ. 9-00

# உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, பிற வைத்தியம் செய்து குணப்படாமல் கைவிடப்பட்டதானாலும் சரி, ஊசியேற்றிக் குணப்படாமலிருந்தாலும் சரி இனி காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி சிரங்கு, பாண்டு, சோகை, காக்கைவலிப்பு, வாதம், நீரழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்பு வலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பனஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன்பின் காணுதல், சூதக வலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

## சிவா படை மருந்து

படை, பற்று, சொறி, ஊரல், நமச்சல் முதலிய வியாதிகளுக்கு சிறந்த மருந்து—இரண்டு மூன்று தடவை பூசிவர குணமடையும்—

விலை ரூ. 2-50

# மதன சஞ்சீவி லேகியம்

(ஆண்களுக்கு மட்டும்)

வாலிப, வயோதிப அன்பர்களே! உங்கள் உடல் நலனைச் சிறிது சிந்தித்து, சிறு வயதிலும், வாலிப வயதிலும் தெரிந்தும், தெரியாமலும், தவறான நட்பாலும் செய்கிற தவறுதல்களே இப்போது உங்களின் தசை, நாடி, நரம்பு முதலிய சப்த தாதுக்கள் கெட்டு, நஷ்டமடைந்து, இரத்தக் குறைவு, சோர்வு, கண் எரிவு, தளர்ச்சி, கெட்ட கனவுகள், அடிக்கடி சிறுநீர் உறுப்புக்கள் தளர்ச்சி, எடை குறைவு, முதுகு, கை, கால் மூட்டுக்களில் வலி, பலஹீனம், பீதி, பயம், வெறுப்பு உண்டாகி தாய், தந்தையரிடமும் சொல்ல முடியாமல் மனவேதனையும் கஷ்டமும் அடைந்து நிம்மதி இல்லாமல் வாழ்கின்றீர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், பலரிடம் வருடக் கணக்கிலும் சிகிச்சை பெற்றும் ஒரு பலனும் இல்லாமல் ஏமாந்தவர்களும் இனிக் கவலைப்பட வேண்டாம்.

வியாதியஸ்தர்கள் எமது மதன சஞ்சீவி லேகியத்தை ஒரு புட்டி உபயோகிக்கும் பொழுதே பலனைக் காணலாம். எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் நாடி நரம்புகள் பலமடைந்து, புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று வாழலாம். எடை கூடியவர்களும், நீரழிவு (ப்ளட் பிரசர்—Blood Pressure) பித்தக் கொதிப்பு உள்ளவர்களும் சாப்பிடலாம் ருசியானது; நம்பிக்கையானது; பத்தியமில்லை. ஒரே புட்டியில் குணம் காணலாம். இழந்த சக்தியை மீட்டு வீரியத்தையும் திரேக வளர்ச்சியையும் தரும். குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம்.

எமது முருகானந்தா வைத்தியசாலையின் இணையற்ற தயாரிப்பான மதன சஞ்சீவி லேகியம் சக்தி வாய்ந்த மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

ஒரு ருத்தல் ரூபா 23-00, அரை ருத்தல் 12-00 வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

## "மதன லேபனம்"

ஜீவநரம்புகளின் பலவீனத்தைப் போக்க சிறந்த ஔஷதம்.
வெளிப்பூச்சு மருந்து விலை ரூபா 5-50

எந்த வியாதியாக இருந்தாலும் சரி என்னைக் கலந்து ஆலோசியுங்கள்.
உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

# அமிர்த சஞ்சீவி லேகியம்

ஜீரண சக்தியை சீர்திருத்தி இரத்தக் குறைவினால் உண்டாகும் தலைவலி, மயக்கம், கண்கள் இருண்டு வருதல், இடுப்பில் வலி, மற்றும் காய்ச்சல், இன்னும் இதர வியாதிகளுக்குப் பின் உண்டாகும் கேச உதிர்வை நிறுத்தி சகல பலஹீனத்தையும் போக்கி முகவசீகரத்தையும், பழைய உற்சாகத்தையும், சக்தியையும் மீண்டும் அளிக்கிறது அமிர்த சஞ்சீவி லேகியம்.

இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதது. விலை ரூபா 15-00

# சிவா கபஹரசிரப்

ஈளை, இளைப்பு, இருமலுக்கு ஒப்பற்ற நிவாரணி, சிறியோர் முதல் பெரியோர் வரை வயது வித்தியாசமின்றிப் பாவிக்கலாம். மூச்சுவிட முடியாமல், கண் பிதுங்கி கழுத்து ஸ்தம்பித்து, கால் கைகள் தள்ளாடி, உடம்பில் வியர்வை பெருகி, ஏது செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கும் ஒருவர் எமது ஔஷதத்தைச் சாப்பிடுவாராகில், அப்பொழுதே சுகம் பெற்று மூச்சு தாராளமாய் விட ஏற்பட்டு, ஆனந்த பரவசமாவார். பரீட்சியுங்கள். இம்மருந்தின் முக்கிய குணம் கபத்தைச் சேர்க்காமல் கண்டிக்கும் கர்குர் என்னும் சப்தத்தைப் போக்கும். சுவாசத் தடையை அதிசீக்கிரத்தில் மாற்றும்.

விலை ரூ. 10-50 வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும்.

## முருகானந்தா வைத்தியசாலை,
## 104, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(23)



## அன்பழகன் ஊட்டிய தெம்பு!

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

கோவை மகேசன்

முதல் நாள் இரவு அடியாரின் 'தங்கவங்கம்' நாடகம் முடிந்து வந்து படுக்கைக்குப்போக இரவு நெடுநேரமாகி விட்டதால், காலையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன்—

''மணி ஏழு ஆகிவிட்டது. எழும்புங்கள். காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சீக்கிரம் புறப்படுங்கள். நாங்கள் இப்போது பேராசிரியர் அன்பழகனைச் சந்திப்பதற்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறோம்'' என்று கூறியபடியே என்னைத் தட்டியெழுப்பினார் நண்பர் சனார்த்தனம்.

''என்ன கும்பகர்ணத் தூக்கம் போடுகிறீர்கள் போலிருக்கிறதே? 'கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே'!' என்று கூறியபடியே அப்போதுதான் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார் அண்ணன் அமிர்தலிங்கம்.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து சற்றுமுற்றும் பார்த்தேன். அதிகாலையிலேயே எழுந்து காலைக் கடன்கள் யாவும் முடித்து புன்னகை பூத்த முகத்தினராய்த் தந்தை செல்வா அங்கு இருப்பதைக் கண்டேன்.

என்னை மயக்கிய நித்திரா தேவியைத் திட்டிக்கொண்டே எழுந்து ஓடோடிச்சென்று மளமளவென்று காலைக்கடன்களை முடித்து பத்தே பத்து நிமிடங்களில் 'டிரஸ்' செய்துகொண்டு வந்துவிட்டேன்.

தமிழக நலத்துறை அமைச்சரும் கழகத்தின் முன்னணித்தலைவர்களில் ஒருவருமான பேராசிரியர் அன்பழகன் அவர்களைச் சந்திப்பதற்காக அவரது இல்லம் நோக்கிச்சென்றுகொண்டிருந்தோம்.

பேராசிரியர் அன்பழகன் அவர்களைப்பற்றி தமிழகத்தில் திராவிட இயக்கத்தின் வரலாற்றினை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். திராவிட இயக்கத்தின் தொடக்ககால முதற்கொண்டே, அந்த இயக்கத்துடன் தம்மைப்பிணைத்துக் கொண்டவர் பேராசிரியர் அன்பழகன்.

பேராசிரியர் அன்பழகனுக்கும் திராவிட இயக்கத்துக்கு மிடையேயுள்ள இறுக்கமான பிணைப்பைப் பற்றி கலைஞர் கருணாநிதி கூறியிருந்ததை ஈண்டு நினைவு கூருதல் நலம்.

''1942 என்று கருதுகிறேன். திருவாரூரில் சிக்கந்தர் அயாத்கான் நினைவு நாளில் கலந்துகொள்ள பேரறிஞர் அண்ணா அழைக்கப்பட்டிருந்தார். திருவாரூரிலிருக்கும் சிறிய மசூதியொன்றின் தாழ்வாரத்தில் அந்த விழா நடைபெற்றது.

''அண்ணா அவர்கள் பேச அழைக்கப்பட்டார். அண்ணா அவர்களும் பேச எழுந்து ''நான் பேசுவதற்கு முன்பு உங்கள் முன்னால் நல்ல வாலிபத்தோழர் ஒருவரை—தமிழ் மணம் கமழக் கமழச் சொற்பெருக்காற்றக்கூடிய இதுவரை அறிமுகமாகாத ஒருவரை — எதிர்காலத்தில் தமிழகத்தில் சுடர்விளக்காக திகழப்போகிற வரை பேசச்சொல்கிறேன். அவரிடம் நல்ல பேச்சாற்றலையும் கருத்தாற்றலையும் காணலாம் 'என்று குறிப்பிட்டு இப்படியெல்லாம் வர்ணிக்கப்பட்ட வாலிபர் இப்போது பேசுவார் என்று குறிப்பிட்டார்கள். பேராசிரியர் அன்பழகன்தான் அப்போது பேசினார்.

1942 முதல் 72 வரை இந்த 30 ஆண்டுக்காலத்தில் தமிழக வரலாற்றில் எத்தனையோ மாற்றங்கள் விளைந்திருக்கின்றன. திராவிட இயக்கத்தில், இப்படிப்பட்ட மாற்றங்களைச் செய்தவர்கள் யார் யார் என்று பார்த்தால் அதன் தளநாயகர்களிலே ஒருவர்தான் பேராசிரியர் அவர்கள்!

அந்த 30 ஆண்டு கால வரலாறு சாதாரணமானதல்ல! மொழி உணர்வுமிக்க —தமிழர்கள் தமிழுக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுக்க தடந்தோள்கள் தட்டி அறப்போர் வாள் தூக்கி களத்தில் குதித்தது 1938-ல்!

ராஜாஜி அவர்கள் கட்டாய இந்தியைத் திணித்த நேரம். தமிழகமே போர்க்கோலம் பூண்டிருந்தது. அப்போதுஏற்பட்டதமிழுணர்வு —தமிழ்க் கனல்—தமிழைப் பழிப்பவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்று சொல்கிற அந்த உணர்ச்சி இப்போதும் எங்கும் நிறைந்து கிடக்கக் காண்கிறோம்.

தமிழ் வாழவும்—தமிழுரிமைக்காகவும் எத்தனையோ கிளர்ச்சிகள் எத்தனையோ வகைகளில் ஊக்கமும் ஆக்கமும் பெற்றன.

போராட்டங்கள் என்றால் பல முனைகளிலிருந்து நடத்தப்பட வேண்டும்.

கையில் ஆயுதமேந்தி களம் செல்பவர்கள் ஒரு பகுதி! தளபதிகளாக இருப்பவர்கள் இன்னின்ன இடங்களுக்குச் செல்ல வேண்டும் — இப்படியிப்படிச் சாட வேண்டும் — எதிரிகளைச் சந்திக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவது ஒரு பகுதி! வெற்றி தோல்விகளைக் கணிப்பவர்கள் ஒரு பகுதி—என்று இருப்பார்கள்!

எந்தக் கிளர்ச்சியானாலும் இப்படிப்பட்டவர்கள் தேவை!

தமிழகத்தில் 30 ஆண்டுக் காலம் நடைபெற்ற மொழிப் போர் வரலாற்றில் பல பகுதிகளாகக் களங்கள் திரிக்கப்பட்டன.

தமிழகமெங்கும் சென்று, சிற்றூர்கள் பட்டி தொட்டிகள் — பட்டினக் கரைகள் என்று சென்று மக்களைச் சந்தித்து கூடுகின்ற கூட்டம் நூறு பேராக இருந்தாலும் ஐநூறுபேராக இருந்தாலும் எவ்வளவு கூட்டம் என்பதல்ல; கூடுகிறவர்களின் மனதில் கருத்துக்களைப் பதிய வைக்கத்தக்க விதத்தில் கொள்கை பரப்பியவர்களுக்கு உற்ற துணையாக இருந்தவர்களில் முக்கிய மானவர் தான் பேராசிரியர்.

மாணவர் பருவம் கடந்து அவர் பேராசிரியர் பொறுப் பேற்ற காலத்திலும் அவர் களத்தில் நிற்கா விட்டாலும் களத்திற்குரிய காளைகளைத் தயார் செய்யும் பாசறையில் இருந்தவர். [illegible] பற்றிய விரிவுரையாற்றும் போதும் இலக்கியங்களையும் —வரலாறுகளையும் சொல்லும்போதும் அதன் மூலம் தமிழுணர்ச்சியை-தன்மான உணர்வை ஊட்டிக் கொண்டிருந்தார் என்பதனைக் கேட்டு நாடும் — நாமும் மகிழ்ந்திருக்கிறோம். அந்தக் கட்டத்தில் இருந்தேன்—நேர் முகாமில் இருந்தேன்—இப்போது போர்க் களத்திற்கே வருகிறேன் என்று களம் நோக்கிப் புறப்பட்டார்.

பதவிக்காகவோ பொறுப்புகளை ஏற்கவோ அல்ல; சிறை வாய்ப்பிருந்தாலும்—சித்திரவதைக்கு ஆட்படுவதற்கானாலும் உள்ளம் சித்தமாகவே இருக்கிறது என்று அண்ணாவின் அணிவகுப்பில் பீடுநடை போட்டவர் பேராசிரியர் அவர்கள்.

இன்னும் என் மனக் கண்ணில் காட்சியாகத் தெரிகிறது-விலைவாசிப் போராட்டத்தின்போது பேராசிரியர் அவர்கள் கொடியேந்தி பல தோழர்களை அழைத்துக் கொண்டு சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள அலுவலகத்தின் முன்னே மறியல் செய்யப் புறப்பட்டபோது அவரது நிமிர்ந்த நடையும்—ஏந்திய கொடி அசைந்த பாங்கும்—சிந்திய புன்னகையும் என் மனக்கண் முன்னால் நிற்கின்றன. நாங்கள் தொலைவிலிருந்து போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தோம்

கழகக் கட்டளையானாலும் —அண்ணா ஆணையிட்டாலும் —கழகத் தோழர்களோடும் தலைவர்களோடும் நடந்த தகைமை பேராசிரியருக்கு உண்டு!

30 ஆண்டுக்கால வரலாற்றில் பேராசிரியர்தனி இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்''

இவ்வாறு முப்பதாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில் முன்னணி வகித்து அனுபவம் பெற்ற பேராசிரியர் அவர்களிடம் உரையாடுவதினால் பல பயன்தரும் கருத்துக்கள் ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கும் என்று நான் எதிர்பார்த்ததில் வியப்பென்ன இருக்க முடியும்?

பேராசிரியர் அன்பழகன் அவர்களது இல்லத்துக்கு நாம் வந்து சேர்ந்த போது பேராசிரியரே வாசல் வரை வந்து பெரியவர் செல்வாவுக்கு சரிகைமாலை சூட்டியதுடன் நம்மையெல்லாம் அன்புடன் அழைத்துச்சென்றார்.

எளிமையும் அறிவு முதிர்ச்சியும், நிதானமும் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் முகத்தில் தவழ்ந்தன. ஆனால் ஐம்பது வயதாமே இவருக்கு — என்னால் நம்ப முடியவில்லை. 35 வயது மதிக்கத்தக்க தோற்றத்துடன் காட்சி தந்தார் பேராசிரியர் அன்பழகன் அவர்கள்.

**''பேரறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட தலைவர் நீங்கள். உங்களை வரவேற்பதில் அண்ணாவின் தம்பிகளாகிய நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்''** என்று தந்தை செல்வாவைப் பார்த்து மகிழ்ச்சியுடன் பேராசிரியர் கூறியபோது அவரது குரலில் ஒரு வகைப் பாசம் இழையோடியதைக் கண்டேன்.

இதற்குப் பெயர்தான் இனப்பாசமோ?

ஈழத் தமிழர் பிரச்சினை பற்றியும், இங்குள்ள அரசியல் நிலைகள் பற்றியும் மெத்த ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்து கொண்டார் பேராசிரியர். ஈழத் தமிழர் பின்பற்றிட வேண்டிய சில நல்ல ஆலோசனைகளையும் தெரிவித்தார் அவர்.

பேராசிரியர் அவர்களுடன் நாம் நடத்திய அரசியல் பேச்சுக்கள் அனைத்தையும் அப்படியே கூறிவிட நான் தயாராக இல்லை. ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் அவர் வலியுறுத்தினார். **'இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி. மு. கழகத்துக்கு எப்பொழுதும் ஆர்வமும் அக்கறையும் இருந்து வந்திருக்கிறது. அந்த ஆர்வமும் அக்கறையும் இன்னும் அப்படியேதான் இருக்கிறது.''**

என்று கூறிய பேராசிரியரிடமிருந்து விடை பெற்று வெளியேறினோம். வாசல் வரை வந்து நம்மை வழி அனுப்பி வைத்தார் பேராசிரியர்.

—தொடரும்.

---

## பறிபோகிறது...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

காப் பசியைத் தீர்க்க முயல்கிறது. நாளும்பொழுதும் மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் நிமிடத்திற்கு நிமிடம் உயிரனைய திருமலை மண்ணை அபகரிக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை எண்ணிப் பார்க்கும்போது எம் நெஞ்சம் வேதனையால் வெம்முகிறது. முதலிக்குளத்தை மொரவேவாவாக்கி, செல்வநாயகபுரத்திற்குப் போட்டியாக சிறிமாவோபுரத்தை தோற்றுவித்து எம் தமிழ் மண்ணைக் கற்பழிப்பதைக் காணும்போது எமக்கு இரத்தம் கண்ணீர் விடும் நிலை ஏற்படுகிறது.

### வரலாறு திரிக்கப்படுகிறது

திருகோணமலையை தம் ஆதிக்க வெறிகொண்டு அபகரிக்க முனைவது ஒருபுறமிருக்க வரலாற்றையே திரித்து வரலாற்றிற்கே இழுக்குத்தேடும் முயற்சியை எண்ணிப் பார்க்கும்போது எம் உள்ளம் ஏங்குகிறது. கோணேசர் கோட்டையை இராயசிங்க கோட்டை என்று அழைக்க முனைந்துள்ள சில சிங்கள இனவெறியினர் அதற்குக் காரணமும் காட்ட முனைந்துள்ளனர். ஆனால் இவர்களின் பொருள் அற்ற பிதற்றலுக்கு 23.9.68இல் ''டெயிலி நியூசில்'' திரு. கே. சி. கே. பின்வருமாறு நல்லமுறையில் சவுக்கடிகொடுக்கிறார்.

''கோணேசர் கோட்டையை இராயசிங்க கோட்டை என்று கூறுவதும் கோணேசர் கோவில் தங்களுக்குரியதென்று சிங்கள மக்கள் கோரிக்கை எழுப்புவதும் அடிப்படையற்ற பிதற்றலோடு மனிதவுரிமைகளில் தேவையற்று தலையிட்டு நீதியை அநீதி வழிக்குச் செலுத்தும் முறைகேடான செயலாகும். அல்லாவிடில் இக்கூற்று எழுப்புவோர் முறைதவறிய சோழரின் செயலின் நினைவுச் சின்னம் தான் இன்றைய சிங்கள இனம் என்று வெட்கமின்றி ஏற்றால்தான் கோணேசர் கோட்டையை 'இராயசிங்க கோட்டை' என்று, கூறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவர்.''

### கோணேசர் கோவிலும் கோணமாமலையும்

இனி, வரலாற்றுக் கண் கொண்டு கோணேசர் கோவில் வரலாற்றையும் கோணமாமலையின் வரலாற்றையும், சுருக்கி ஆராய்வோம். வரலாறு உணர்ச்சிதான் உரிமைக்கு வித்தென்பதை எம்மவர் நினைவில் வைத்தல் நலம்.

—அடுத்த இதழில் முடியும்—

---

## விடை கொடடி! —சோமலிங்கம்—

முத்தே! முக்கனியே! முப்பாலே! என தன்னை
முத்தமிழாள் சிறைப்பட்டுப் பெருமூச்சு விடுகின்றாள்
செத்தே மடிந்தாலும் அவள் சிறை மீட்கவே நானும்
சித்தம துகொண்டேன் பெருஞ் சினத்தீயது கண்டேன்
முத்து நகை வீசி மதி முகமும் மலரத்தான்
முத்தம் தருகின்றேன் இது முடிவு எனக்கொண்டேன்
அத்தான் களம் செல்வாய் என அன்பே! விடைகொடடி
ஆத்தாள் துயர் தீர்க்க இனி ஆனேன் விடைகொடடி!

செத்தே மடிந்தாலும் ''செந்தமிழே! உனக்கே என்
சொத்தானவர் அழிந்தார்' எனும் சுவையான சொல் நினைந்து
நித்தப் பெருமகிழ்வு இந்த நிலத்தில் அடைந்திடுவாய்
நித்தம் இருபேரின் பெயர் நின்று உலகாளும்
அத்லைத உனதப்பா உன் அம்மான் அழிந்ததுபோல்
அத்தான் அழிந்தாலும் அவர் அழிவார் பெயர் அழியா
அத்தான் களம் செல்வாய் என அன்பே விடைகொடடி
ஆத்தாள் துயர் போக்க இனி ஆனேன் விடைகொடடி!

பித்தர் எனப் பிள்ளை எனப் பெயர் என நம்மை
பித்தர் சிலர் எண்ணிப் பெரும் பிழையே செய்கின்றார்
குத்தும் செயல் பொறுப்பேன் தலைகொடுக்கத் தவறேன் என்
குத்து விளக்கான தமிழ்க்கோலங் காத்திடுவேன்
சத்தான சொல்லுடையாய் ஒரு சுணமேனும் பெரியாய்
சத்தம் வருதிசையில் செலும் தமிழர் படைபார்நீ
அத்தான் களம் செல்வாய் என அன்பே விடைகொடடி
ஆத்தாள் துயர் போக்க இனி ஆனேன் விடைகொடடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.


முதன் முதல் இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற, முதன் முதல் இந்தியாவிலிருந்து
ஹாலிவூட் ஆஸ்கார் பரிசுக்கு நியமிக்கப்பெற்ற நடிப்பிற்கே இலக்கணம் வகுத்த
பத்மஸ்ரீ சிவாஜியின் திரைப்படவிழா

# செல்லமகால் திரையில்

2வது வாரமாக நீடிக்கப்பட்டது
சிவாஜி ஜெமினி சாவித்திரி
ரங்கராவ் — நடித்த

## பந்த பாசம்

அடுத்து
சிவாஜி தேவிகா நாகேஷ்
மணிமாலா நடித்த

## அன்பு கரங்கள்



கெப்பிட்டல் பிளாஸா
வெலிங்டன் லிடோ
(யாழ்நகர்) (யாழ்நகர்)

அகில இந்திய சிறந்த நடிகர் விருது பெற்ற
பாரத் எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா—லக்ஷ்மி—அசோகன்—மனோகர்—சோ
மற்றும் பலர் நடித்த—

கே. சி. பிலிம்ஸ்

## குமரிக்கோட்டம்

இசை: எம். எஸ். விஸ்வநாதன்
(வண்ணச் சித்திரம்)
இயக்குநர்: ப. நீலகண்டன்

7-வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்)
சிவாஜி—சரோஜாதேவி—முத்துராமன் —நடித்த—

## "அருணோதயம்

வெகு விரைவில்

சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
எம். ஆர். ராதா
மனோரமா
வி. கே. ராமசாமி
—நடித்த—

## பட்டிக்காடா பட்டணமா?

இப்பொழுது காட்சியளிக்கிறது

## சென்ட்ரல்
திரையில்

ஜெய்சங்கர், நிர்மலா, நாகேஷ்
—நடித்த—
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

## உயிரா மானமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972ம் வருடம் செப்டெம்பர் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.